குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 ]  சித்தார்த்தி ஆண்டு மார்கழித்திங்கள் 10—1—80  [ இதழ்

உலகெலாம் பசியும் பிணியும் நீங்கி - வசியும் வளனும் சுரக்க
அருள்பாலிக்கும்



அன்னை தானிய லட்சுமியின் திருவுருவம்
உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாளில்
இவ்விதழில் காட்சி தருகிறது.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

என்னதுயான் என்பதுவும்
யான்பிறர்செய் தாரெனலும்
மன்னுமதி பாதகமேல்
வாஞ்சைகளும்— இன்னமின் னம்
சொல்லுகின்ற இச்செயல்நீ
தூண்டுதலற் றென் செயலால்
அல்லவே சொக்கநா தா.

—சொக்கநாத வெண்பா. 60

ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்.**

உ
குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 39 | 10—1—80 | இதழ் 2

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அல்லது செய்தல் ஓம்புமின் ... | 49 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... | 54 |
| 3 | திருக்கடவூரில் அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள் | 57 |
| 4 | திருக்கடவூர்மயானத் தலச் சிறப்புக்கள் ... | 59 |
| 5 | மதிப்புரை ... | 64 |
| 6 | சைவத்தின் மேற்சமயம் வேறில்லை ... | 65 |
| 7 | பொம்மலாட்டம் ... | 73 |
| 8 | அபிராமி அந்தாதி ... | 75 |
| 9 | ஐயனுர் வழிபாடு ... | 79 |
| 10 | செய்திகள் ... | 87 |
| 11 | எதிர்காலம் ... | 91 |
| 12 | பார்வையாளர் குறிப்பு | 72, 86 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ, 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ, 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 39 | சித்தார்த்தி - மார்கழி - 10—1—80 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## "அல்லது செய்தல் ஓம்புமின்"

**தெளிந்த உண்மை :**

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்பது நமது முன்னோர், நம்மவர்களுக்குக் கூறிய ஒரு சிறந்த அறிவுரை. நாடாளக் கிடைக்கும் வாய்ப்பு எல்லார்க்கும் எளிதில் வாய்ப்பதில்லை. அப்படி வாய்த்தாலும் நின்றுநிலைப்பதில்லை. எவராயினும், இத்தகு அரிய வாய்ப்புக்கிடைத்தால் இதனைப் பயன் படுத்திக்கொண்டு, நாடு, மொழி, இனம், சமயம், கலை, கலாசாரங் களுக்கு அரிய தொண்டாற்றிப் புகழ் ஈட்டவேண்டும். மாறாக, இவற்றை அழிப்பதற்கோ, இவற்றின் வளர்ச்சிக்கு ஊறு விளைக்கவோ முயன்றால் அழியாப் பெரும்பழியையே எய்த நேரிடும். இவை வரலாற்று அடிப்படையில் கண்டு தெளிந்த உண்மை என்பதனால் எழுதப்படுவன. தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் ஆட்சி யாளர்கள் இவற்றைத் தம்கருத்தில் கொள்வார்கள் என நம்புகிறோம்.

## தேர்தல்கால அறிவிப்பு :

குடியாட்சி நாடுகளில் தேர்தல்கள் வந்துபோவதுண்டு ஆட்சி மாற்றங்கள் இயற்கை. தேர்தல் நேரங்களில் அரசியல்வாதிகள் மக்களைக்கவர, பல புதிய யுத்திகளைக் கையாள்வது வழக்கம். வாக்கு உறுதிகள் எதுவாயினும் அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளுக்கு அழிவு நேராதனவாகவே அவை அமைதல்வேண்டும். புடவை பிடிக்கவில்லை என்றால், மகளுக்குத் தந்தை வேறு புடவை மாற்றி வாங்கித்தருவதாக வாக்களிக்கலாம். அவள் கணவனையே பிடிக்க வில்லை என்றால், வேறுகணவனைக் கட்டிவைக்கிறேன் என உறுதி கூறுவது நகைப்பிற்கிடமானது. முன்னரே அரசின் பலநாளைய முரணான நடவடிக்கைகளால் வருவாய் இழந்து பொலிவு குறைந்து நிற்கும் தமிழகச் சைவ - வைணவத் திருக்கோயில்கள், இவற்றைப் பேணிக்காக்கும் திருமடங்கள் இவற்றை மேலும் ஊனப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு புதிய தேர்தல் கால அறிவிப்பொன்றை மீண்டும் வெளியிட்டுள்ளது. அறநிலையங்களின் நில வருவாயை 60 – 40 என்ற விகிதத்திலிருந்து மாற்றி உழுபவனுக்கு 75, உடைய வனுக்கு 25 என்ற சட்டத்தை அமல்படுத்த உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

## மறைமுக ஏற்பாடோ ?

பசித்தவனுக்கு, வீட்டுப்பானையிலிருந்து எடுத்துவந்து சோறு போட்டால் அது கொடை அல்லது அறமாகலாம். முன்னரே பசித் திருப்பவனது கையிலிருந்த அரைவயிற்றுச் சோற்றைப் பறித்து இன்னொருவனுக்குக்கொடுப்பது அறமுமல்ல ; அரசியல் நாகரிகமும் அல்ல. தமிழகத் திருக்கோயில்கள் பல நிலவருவாயை நம்பி நடை யிடுவன. கோயில் நிலங்களைச் சிலர் உழுது பயிரிட்டுவருகின்றனர். இதுவரையில் விளைவில் 100க்கு 40 பங்கினைத் திருக்கோயில்களுக்கு வழங்கவேண்டுமென்பது சட்டம். தமிழ்நாடு அரசு உழுபவனுக்கு நலம் செய்வதாக நினைத்து ' நீ 75 பங்கினை எடுத்துக்கொள் ; 25 பங்கினைக் கோயிலுக்குக் கொடுத்தால்போதும் ' என்று சட்டம்போட உத்தேசித்திருக்கிறது. இச்சட்டத்தால் விளையும் தீமைகளை அரசு உணராமல் இல்லை. என்றாலும் இதைச் செய்யத் துணிவது அரசியல் லாபங்களுக்காகவே எனத் தோன்றுகின்றது. உத்தேசச்சட்டம் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களை அழிக்கமட்டுமல்ல ; இந்நாட்டுச் சமய நம்பிக்கைகள், கலைகள், சமயம்சார்ந்த பண்பாடு இவற்றை எல்லாம் ஒருசேர அழிக்க எண்ணும் ஒரு மறைமுகமான ஏற்பாடோ என எண்ணத்தோன்றுகிறது.

**மனிதர்கள் என்று கருதுக :**

கோயில் நிலவருவாயால் இறைவன் ஒன்றும் உண்டு மகிழ்வதில்லை. அது சமயத்தின் நோக்கமுமல்ல. திருக்கோயில்களும் திருமடங்களும் மக்கள் நலம் நாடும் சமூகப்பொதுநிலையங்கள். இவற்றில் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு உணவிடவேண்டிய பொறுப்பினையும் ஆலயங்களிலும் அறநிலையங்களிலும் நடைபெறவேண்டிய வழிபாடு முதலிய அறப்பணிகளையும். அரசே ஏற்றுக்கொள்வதானல் புதிய உத்தேச சட்டத்தால் கவலை விளையப்போவதில்லை. அரசு ஒருநூலகத்தை நடத்துகிறது. ஏன்? மக்களின் அறிவுவளர்ச்சிக்காக. ஒரு மருத்துவமனையை நடத்துகிறது; எதற்காக? மக்கள் உடற்பிணிநீக்க. இங்கே பணியாற்றும் ஆயிரமாயிரம் ஊழியர்களுக்கு அரசு, தன் வருவாயிலிருந்து பலகோடி ரூபாய்களைச்செலவிடுகிறது. ஆனல், மக்களின் பண்பாட்டுவளர்ச்சிக்காக அமைக்கப்பெற்ற திருக்கோயில், திருமடங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசு ஊதியம் ஏதும் வழங்குவதில்லை. இங்கே பணியாற்றும் பல்லாயிரம் ஊழியர்கள் இந்த 60 – 40 இல், 40ஐ நம்பி வாழ்பவர்கள் முன்னரே அரைப்பட்டினிகிடக்கும் இவர்களை முழுப் பட்டினி போடத்தான் அரசின் இந்த 75 – 25 குத்தகைச்சட்டம் வழிகோலுகிறது. திருக்கோயில் ஊழியர்களை அரசு ஊழியர்களாகக் கருதாவிட்டாலும், மனிதர்கள் என்ருவது கருதவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்ரேம்.

**யாரைத் திருப்திப்படுத்த ?**

தமிழ்நாட்டில் நாத்திகவாதம் வெறும் வாய்ப்பேச்சே. இங்கே ஆயிரத்தில் ஒருவன்கூட முழுக்கமுழுக்கக் கடவுள் நம்பிக்கைக்கு முரணனவன் எனக்கூற இயலாது. பெண்களோ பக்தியின் வடிவாக விளங்குபவர்கள். சாதியால், மொழியால், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் பிளவுபட்டுக்கிடக்கும் மனித இனத்தை ஒருங்கிணைக்கும் அரிய அமைப்பே சமயமும் சமயநிலையங்களும். அவலை நினைத்து உரலை இடித்தவன் கதைபோல, சமய நிலையங்களுக்கு எதிரான அரசின் எந்த நடவடிக்கையும் பக்திமிக்க தமிழ்நாட்டு மக்களின் வெறுப்பைத் தேடித்தருமேதவிர விருப்பினைத் தேடி வழங்காது. மனசாட்சிக்கு மாருக அரசில் அங்கம்வகிப்போர் சில நாத்திகவாதிகளைத் திருப்திபடுத்த முனையும் இந்த 75 – 25 ஏற்பாடு அவர்களுக்கு எதிர்முனை விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, உத்தேச 75–25 சட்டத்தைக் கைவிட்டுவிடுவதே தமிழ்நாட்டு அரசுக்கு நலம் பயக்கும் என்பதனை அன்புடன் நினைவூட்ட விரும்புகின்ரேம்.

**மக்கள் வினா :**

60 - 40 என்ற இந்த தற்போதைய நிலையிலேயே உரிய பங்கினை உழவர்கள் திருக்கோயில்களுக்கு அளப்பதில்லை, வருவாய் இன்மையால் பெரும் பெரும் கலைமாளிகைகளாக விளங்கும் தமிழகத் திருக்கோயில்கள் தம் பொலிவினை இழந்து நித்திய நைமித்திய பூஜைகளைக்கூட இயற்ற இயலாது முடங்கிக்கிடக்கின்றன. மேலும் 75-25 சட்டம் வருமானுல் தமிழகக்கோயில்கள் யாவும்பூஜைகள் நடத்த இயலாது வெறும் காட்சிப்பொருள்களாக நின்று சில ஆண்டுகளில் சிதைந்துவிடவும் கூடும்.

முதலமைச்சர் அவர்களும், அறநிலைய அமைச்சர் அவர்களும் கடந்த இரண்டாண்டுகளுக்கும் மேலாக, நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை ஒருபுறம் பேசிவருகிருர்கள். இன்னெருபக்கம் வருவாய்த் துறை அமைச்சர் 75—25 ஐ அறிவிக்கிருர். 'கோயில்களைக் காப்போம்'. 'கோயில் ஊழியர்களைப் பட்டினிகிடக்க விடமாட்டோம்' என்ற அரசின் வாக்குறுதிகளின் உண்மையை, நல்லுள்ளம்கொண்ட பக்தர்கள் ஐயப்படுகிருர்கள். அரசு, தனது உண்மையான எண்ணத்தை அனைவரும் அறியும்படி வெளிப்படுத்தி, சமய நம்பிக்கை மிக்க தமிழ்மக்களின் பாராட்டைப் பெறப்போகிறதா? அல்லது இம் மாதிரியான முரண்பாடுகளிலேயே எஞ்சிய காலத்தையும் நடத்திச் செல்ல நினைக்கிறதா? என்பதை மக்கள் அறிந்துகொள்ளப் பெரிதும் நாட்டமுடையவர்களாக இருக்கிருர்கள்.

**ஒரு விளக்கம் ;**

கோயில்களுக்குமட்டுமில்லை. சிறு நிலவுடைமையாளர்களையும் உத்தேச 75—25 சட்டம் முடமாக்கிவிடும். விளைவில் 75 பகுதியை உழுபவன் எடுத்துக்கொண்டு, 25 பகுதியை உடைமையாளருக்குத் தருவதைச் சட்டம் வற்புறுத்துமானுல், ஒருவகையால் இது நிலவுடைமையாளர்களைப் பழிவாங்கும் அரசின் மறைமுகமான நோக்கமாகவே இருத்தல்கூடும். தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஏக்கர் நிலம் ஒரு குத்தகைதாரனிடம் இருப்பதாகக்கொள்வோம். இதில் ஒரு பசலியில் விளைவது குறைந்த அளவு 24 கலம் எனக் கொள்வோம். அதாவது 57 கிலோ கொண்ட 12 மூட்டை. இதில் உழுபவனுக்கு 9 மூட்டை. நிலவுடைமையாளனுக்கு 3 மூட்டை. இந்த மூன்று மூட்டையின் விலை சுமார் 150 ரூபாய். இதில் நிலவுடைமையாளன் நிலவரி, சர்சார்ஜ், தண்ணீர் தீர்வை என்ற வகையில் அரசுக்குச் செலுத்தவேண்டிய தொகை ரூ. 100/. இதுபோக உடைமையாளனுக்கு மிஞ்சுவது ரூபாய் ஐம்பதுமட்டுமே. ஒரு ஏக்கர் நிலத்தின் மார்க்கெட் விலை ரூ. 6000/. இந்தத்தொகையை ஒரு வங்கியில்

முதலீடு செய்தால்கூட ஆண்டுக்கு ரூ. 600/ நிலையான வட்டி கிடைக்கும்.

**கைவிடுக :**

அரசு உண்மையிலேயே உழுபவர்கள்மேல் கருணை உடையதாக இருந்தால், நிலவரியை நீக்கலாம்; உரவிலையைக் குறைக்கலாம்; மின்சாரக்கட்டணத்தை மாற்றி அமைக்கலாம்; கடன்களின்வட்டிகளை ரத்துசெய்யலாம். இதையெல்லாம் விட்டுவிட்டு ஏழை சிறு நிலவுடைமையாளர்களையும், நிலவருவாயால் நடையிடும் திருக் கோயில்களையும் அரசு உத்தேச 75—25 சட்டத்தால்முடக்கநினைப்பது எவ்வகையிலும் அறமாகாது. எல்லார்க்கும் ஒப்ப முறைசெய்வதே அரசு. எனவே, உத்தேச 75—25 சட்டத்தினைத் தமிழ்நாடு அரசு கைவிடுவதோடு, தற்போதுள்ள 60—40 குத்தகை அமைப்பினைத் தொடரச்செய்து. உரிய வருவாயை, உரியவர்கள்பெற வழிகாண்பது இன்றியமையாததாகும்.

**அன்பர்கடன் :**

திருக்கோயில் கோபுரத்தை அரசின் சின்னமாகக்கொண்டு பெருமிதம் அடையும் அரசு - வெளிநாட்டார்க்கு இங்குள்ள கோயில் களையும், அவற்றிலுள்ள கலைகளையும் காட்டி மனம்மகிழும் அரசு இத்தகு கலைமாளிகைகள் அழிந்துபோகத்தக்க எந்த சட்ட நடவடிக் கைகளையும் மேற்கொள்ளாதிருப்பதே நன்றியுணர்ச்சியாகும். தாயக ஓவியங்களைப்போற்றிப் புரந்து தங்கள்பெயரை தங்கள் அர்ப்பணிப் புக்களோடு இணைத்துப் புகழ்பெறவே தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் விரும்புவார்கள் என அனைவரும் நம்புகின்றோம். பலமுறையும் கூறும் இச்செய்திகள் அரசின் கவனத்தை ஈர்க்கமட்டுமன்று; பக்தியும். பண்பாடும் மிக்க தமிழக மக்கள் தங்களது திருக்கோயில்களுக்கும், திருமடங்களுக்கும் தீங்கு நேரும்போது குரல் எழுப்பவும் கடமை யுடையவர்கள் என்பதனை நினைவூட்டவுமேயாகும்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தில்லைத் திருக்கோயிலில் நடைபெற்ற

## "கோயில்" நூல் வெளியீட்டு விழாவில்

வழங்கியருளிய

# ஆசியுரை

2—1—80

"கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"

**அமைதிகாண அரியவழி :**

இவ்வுலகின்கண் பொருள்நெறியிலும் அருள்நெறியிலும் வாழ்வோர் பலரும் அன்றாடம் பல்வகை இன்னல்களை அடைந்து வருகின்றனர். இவர்களில் பலருக்கும் இறைவனை வணங்கி வழிபடவேண்டும் என்னும் எண்ணம் உண்டு; பக்தியுண்டு. ஆனால் அதில் அழுத்தம் இல்லை. நல்ல பக்தி உறைப்பு இல்லை. இறைவன்தான் இந்த உலகத்தை இயக்குகின்றான்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் அழுத்தமான இறையுணர்வும் பக்தி உறைப்பும் இருந்தால் எந்த நேரத்திலும் துன்புற வேண்டியது இல்லை. தீமைகளின் விளைவு பாவம்; நன்மைகளின் விளைவு புண்ணியம். ஆதலின் பாவம் செய்தார்க்கு மன அமைதி இல்லாமல்போகிறது என்ற எண்ணம்கொண்டு நல்லனசெய்து வாழவேண்டும்.

நமக்கு வருகிற துன்பத்திற்குக் காரணமாவது ஆசையே. அந்த ஆசையின் அடித்தளத்தில் பாவம் என்னும் மாளிகை எழுப்பப்படுகிறது. ஆதலின் உலகப் பொருள்களின்மீதுள்ள ஆசையினை விடவேண்டும். அதற்கு இவ்வுலகின்கண்வாழும் பற்றுடையார்களைப் பற்றி வாழாது, பற்றற்றானைப்பற்றி வாழவேண்டும். அங்ஙனம் வாழ்தால் ஆசை அகலும். இதைத்தான் திருவள்ளுவர்,

" பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்று கூறுகின்ருர். இக்குறளில் பற்றுக என்றும், அப்பற்றைப் பற்றுக என்றும் இருமுறை குறிப்பிடுகிருர். காரணம் இறையடியைப் பற்றுவது உயிர்கட்கு எளிதானதல்ல என்பதை அறிவித்தற்கும், எளிதல்ல என்பதை உயிர்கள் உணர்ந்து சோர்வின்றி விழிப்பாகப் பற்றிக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தி உணர்த்துவதற்குமே உடன்பாட்டுவகையில் இருமுறை கூறியுள்ளார். மேலும் அப்பற்றின் வழியாகவரும் 'கவலையும் அதன் வழிவரும் துன்பமும் நீங்குதற்கு இறைவன் தாளன்றித் துணை இல்லை என்று எதிர்மறையில் வற்புறுத்தியுள்ளார்.

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது "

என்பது அக்குறள். இவற்றையெல்லாம் அப்பர் அடிகள்,

" பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்ரு நில்லே.

என்ற தாண்டகத்தில் பாடியருளுகின்ருர். உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும், உன்னையல்லால் ஒருதெய்வத்தை நினையேன் என்றும், ஒருமித்த நிலையில் வழிபட்டோர்க்குப் பாவங்களும் அதன் வழிவரும் துன்பங்களும் இல்லை என்றும் கூறுகின்ருர். இதைத்தான் திருஞான சம்பந்தரும், 'முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே பற்றுநின் ருரைப் பற்ரு பாவமே' என்று இத்தலத்திருப்பதிகத்தில் கூறியருளுகின்ருர்.

**அந்தணர் என்போர் அறவோர்:**

இத்திருப்பாடலின்கண் இன்னும் ஒரு குறிப்பு உள்ளது. பாவங்களின் வழி உலகில்வரும் பஞ்சத்தினைப்போக்கி உலகில் வசியும் வளனும் சுரக்கக் கற்ருங்கு எரியோம்பும் கருணையுடைய அந்தணர்கள் வேள்வி செய்யவேண்டும் என்றும் கூறுகின்ருர். வள்ளுவர் கூறுவது போல் கற்றவழிநிற்றல் எல்லா நிலையிலும் தேவை என்பதை உணர்த்த இங்கும் 'கற்ருங்கு எரியோம்பி' என்று குறிப்பிடுகின்ருர். கலி என்ருல் பஞ்சம் என்று பொருள். அப்பஞ்சம்நீங்க அந்தணர்கள் அழலோம்பும் அருமைப்பணியைச் செய்கிருர்கள்.

அந்தணர் என்போர் அறவோர் என்று கூறிய திருவள்ளுவர் அதற்குக் காரணத்தையும் குறிப்பிடுகின்றார். உலகில் எல்லா உயிர்களும் வாழவேண்டும் என்ற அருளுடையராயிருக்கும் செந்தண்மையை அவர்கள் கொண்டு வாழ்கின்றார்கள் ஆதலின் அந்தணரை அறவோர் என்கின்றார். உலகம் பசியாலும் பஞ்சத்தாலும் துன்புறுகின்றதே என்று எண்ணி, அத்துன்பம் நீங்கி வளம்பெருக, அந்தணர்கள் வேள்வி செய்கின்றார்கள் ஆதலின் அவர்கள் அறவோர் தானே! வேள்வி செய்தால் மழைபொழிந்து வளம் சுரக்கும் என்னும் குறிப்பில் சேக்கிழாரும் 'வேள்வி நற்பயன் வீழ்புனலாவது' என்று அருளிச்செய்கின்றார்.

**அழலோம்பும் அருமைப்பணி :**

இங்ஙனம் அருள்நிலையில் அந்தணர்கள் அழலோம்புகின்றனர் என்ற குறிப்பு அப்பரடிகள் பாடலிலும் வருகிறது. அப்பூதி அடிகளின் வீட்டில் அரவுதீண்டி இறந்த மூத்த திருநாவுக்கரசை இறையருளால் எழுப்பிக்கொடுத்தருளிய திருநாவுக்கரசர் அப்பூதியடிகளைப் பாராட்டுமுகத்தான் திருப்பழனத் திருப்பதிகத்தில்,

" வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
**அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி**
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே "

என்று பாடியருளுகின்றார், அகத்துறையில்வரும் இப்பாடலில் தலைவி, கலியின் ஆற்றல்மெலிய அழலோம்பும் அப்பூதியின் தலையில் சென்று தங்கும் பூவாகியிருக்கும் சேவடி உடையவனே' என்று போற்றுவது எரியோம்புதலின் பயனை அறிவிக்கின்றது. இதில், 'கலிமெலிய அழலோம்பும் அப்பூதி' என்று அப்பரும் வேள்வியால் கலிமெலிதலைச் சுட்டிக்காட்டுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இதேபோன்று கலியின் வலிமைகெட அழல் ஓம்பும் அந்தணர்களை வலிவலத்தில் வந்து கண்டேன் எனும் குறிப்பில் திருவலிவலத் தேவாரத்தில்,

" கலிவலம்கெட ஆரழல் ஓம்பும்
கற்றநான்மறை முற்றனல் ஓம்பும்
வலிவலந்தனில் வந்து கண்டடியேன்
மன்னு நாவலாரூரன் வன்றொண்டன் "

என்று பாடியருளுகின்றார். தேவாரம் அருளிய மூவருமே இக்கருத்தில் ஒன்றுபட்டு அருளியிருப்பதை ஒப்புமைப்படுத்திப் பார்க்கலாம்.

(தொடரும்)

திருக்கடவூரில்

# அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள்

( மூன்றாவது ஆண்டு )

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர்என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

அழகுக்கொருவரும் ஒவ்வாதவல்லியாகிய அன்னை அபிராமியைச் சிந்தையில் தியானித்து, ஆனந்தபரவசராய் விளங்கியவர் அபிராமி பட்டர். அவருக்காக அம்மை தனது திருச்செவியிலுள்ள திருத்தோடு ஒன்றைக் கழற்றி வானத்தில் வீச, அது முழுமதியாக விளங்கி அமாவாசையைப் பௌர்ணமி நாளாகத் திகழச்செய்தது; அன்னையின் அருள்பெற்ற பட்டர் பெருமையை சரபோஜி மன்னனுக்குணர்த்தியது. அத்தகைய அற்புத நிகழ்ச்சி நிகழ்ந்த நன்னாள் தை அமாவாசைத் திருநாள். அந்நன்னாளில் அனைவரும் அன்னை அபிராமியைவழிபட்டு அருள் பெறவேண்டும் என்பதும், பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரந்து நாடு நலம்பெறுதற்கு ஸ்ரீ ஏகாதச ருத்திராபிஷேகம் செய்யவேண்டும் என்பதும் **ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்** திருவுள்ளம்

நிகழும் சித்தார்த்தி ஆண்டு தைத்திங்கள் 3-ம் நாள் (17–1–80) வியாழக்கிழமை தை அமாவாசை புண்ணியகாலம் ஆதலின் அன்று காலை 10-மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆணையின் வண்ணம் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் திருக்கோயிலில் ஸ்ரீ அபிராமி அம்மை உடனாகிய **ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமிக்கு** மகந்நியாச பூர்வக ஏகாதசருத்திராபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் **மதுரை சிவகாமி மில் அதிபர் திரு. கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின்** உபயமாகச் சிறப்பாக நடைபெறும்.

**ஸ்ரீ ருத்திராபிஷேக விளக்கம் :**

ஸ்ரீ ருத்ரம் என்பது ஸ்ரீ ருத்ரப்ரச்னம் ஸ்ரீ ருத்ரசூக்தம் ஸ்ரீ ருத்ராநுவாகம் எனப் பல பெயர்களால் வழங்கப்பெறுவது. ருத்திரன் என்பதற்குத் துன்பத்தைப் போக்குபவன் என்பது பொருள். ருத்திரனுக்கு உரிய மந்திரம் ருத்ரம் எனப்பெறும். இது இருக்கு, யசுர், சாமம்

என்றவேதங்களுள் நடுவணதாகிய யசுர்வேதத்தில் உள்ளது. அதன் ஏழு காண்டங்களுள் நடுவணதாகிய நான்காவது காண்டத்துள் பதினொராவது அனுவாகத்தின் நடுவிலுள்ள ஆருவது மந்திரத்தில் விளங்குவது ஸ்ரீருத்ரம். இது பதினொரு அநுவாகங்களாகிய உட்பிரிவு களையுடைமையால் ருத்திரைகாதசநீ என்றும் வழங்கப்பெறும். வேத புருடர்க்கு ஸ்ரீருத்ரம் கண்ணும், அதனுள் இருக்கும் பஞ்சாட்சரம் கண்மணியுமாம். வேதம் நான்கும், வேதாங்கம் ஆறும், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி, புராணம் என்னும் உபாங்கம் நான்கும் ஆகிய பதினான்கு வித்தைகளுள்ளும் வேதமே மேலானது. வேதத்துள்ளும் ஸ்ரீ ருத்திரமே மேலானது. அதனுள்ளும் பஞ்சாட்சரமே மேலானது. அதனுள்ளும் சிவ என்ற இரண்டெழுத்தே மேலானது. இதனைச் 'சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்' என்று திருமந்திரம் கூறும்.

ஏகாதச ருத்திராபிஷேகம் வேதம் அறிந்த பதினொரு அந்தணர் களைக் கொண்டு பதினொருமுறை உருத்திரத்தை மகந்நியாசத்துடன் ஜபம்செய்து சிவசக்தி கும்பங்களையும் பதினொரு உருத்திரகும்பங்களை யும் பூசித்து, வேள்வியும் பூர்ணாகுதியும்செய்து, சுவாமி அம்பாளுக்கு அவற்றை அபிஷேகம் செய்விக்கும் வழிபாடாகும்.

ருத்திராபிஷேகம் செய்வதால் நாம் மேற்கொள்ளும் காரியங்கள் யாவும் தடையின்றி நிகழும். நோய்கள், தீமைகள், பீடைகள் அனைத்தும் தீரும்; நவக்கிரகங்களினால் வினையும் துன்பங்கள் அகலும்; காலத்தில் மழை பொழியும், நாடு செழிக்கும் என்று காரணாகமம் கூறுகிறது. உருத்திர ஹோமப் பூர்த்தியில் கூறப்படும் சமகம் இறைவனிடம் நாம் வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனையாகும். 'வேண்டத்தக்கது அறிவோய் நீ; வேண்டமுழுதும் தருவோய் நீ' என்று திருமுறை தெரிவிப்பதுபோலச் சமகத்தின் வழி நாம் வேண்டிக் கொள்வனவற்றை நமக்கு இறைவன் அருள்வான்.

வருக! வருக!! வழிபட்டுப் பயன் பெறுக.

---

குறிப்பு:— சுந்தரர் நெல்மலை பெற்றபோது அருளிய 'நீள நினைந்தடியேன்' என்ற திருப்பதிகத்தையும் திருஞானசம்பந்தர் உலவாக்கிழி பெற்றபோது பாடியருளிய 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகத்தையும், கோளறு திருப்பதிகத்தையும் திருமுறைப் பண்ணிசைவாணர்கள் பதினொருமுறை பாராயணம்செய்வர். மாலை ஸ்ரீ அபிராமி அம்மை சந்நிதியில் 'அபிராமி அந்தாதி' பாராயணம் நிகழ்த்தப்பெறும், அந்தாதிப்பாடல் ஒவ்வொன்றிற்கும் நிவேதனமும் ஆராதனையும் நிகழும்.

# திருக்கடவூர்மயானத் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

இத்தலம் திருக்கடவூருக்குக் கிழக்கே $1\frac{1}{2}$ கி. மீ. தூரத்தில் இருக்கிறது. திருமெய்ஞ்ஞானம் என வழங்கப்பெறுகிறது. இது காவிரித் தென்கரைத் திருத்தலங்களுள் 48 ஆவது தலம். சிவபெருமான் ஒரு கல்பத்தில் பிரமதேவரை எரித்து நீருக்கி அவரை மீளவும் உயிர்ப்பித்துப் படைப்புத்தொழிலை அருளிய தலமாதலின் இது மயானம் என வழங்கப்படுகிறது. திருக்கடவூரை அடுத்துள்ளதால் திருக்கடவூர் மயானம் எனக் கூறப்படுகிறது. இத்தலத்தின் மறுபெயர்கள், பிரமபுரி, வில்வாரண்யம் ஆகியனவாம்.

மயானம் என்ற பெயருடைய மூன்று தலங்கள் தேவாரத்தில் கூறப்பட்டுள்ளன. அவை நாலூர் மயானம், கடவூர் மயானம், கச்சி மயானம் ஆகியனவாம். மற்றும் மயானம் எனப்பெறும் தலங்கள் காசிமயானம், வீழிமயானம் என்பனவாம். வீழிமயானம் திருமெய்ஞ்ஞானம் என வழங்கப்படுகிறது. இவ்வைந்து ஊர்களையும் பஞ்ச மயானம் எனக்கூறுவர். நாலூர் மயானம் — இது கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே குடவாசலுக்கு அருகில் உள்ளது. கச்சி மயானம்—இது காஞ்சிபுரத்தை அடுத்துள்ளது. வைப்புத்தலம்.

**புராண வரலாறு :** திருக்கடவூர்த் தலபுராணத்தில் இத்தலத்தின் பெருமை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. படைத்தற்கடவுளாகிய நான்முகனுக்கு 2000 சதுர்யுகம் கொண்டது ஒருநாள். இக்கணக்கின்படி 365 நாட்கள் கொண்டது ஒருவருடம். இவ்வாறு நூறுண்டுகள் சென்ருல் பிரமன் தன்சரீரத்தை யோகாக்கினியில் லயப்படுத்துவார். அவ்வக்கினி அவருடைய சரீரத்தைத் தகித்து லயமாக்கிப் பஸ்மமயமாய், அறியக்கூடாத வஸ்து உருவமாய், சிவதேஜஸ்வரூபமாய் விளங்கியமரும். அதன்பின் ஜீவ சிருஷ்டிக் காலத்தில் அந்த பஸ்மத்தின் ஒருதுளியில் பிர்மாமுதல் சகலமும் உற்பத்தியாகும். இவ்வாறு பிரமன் லயமடைந்த அவ்விடம் மயானம் எனப்படும். திருக்கடவூர்மயானம் மூன்ருவதுபிர்ம்மா லயம் அடைந்த இடம் எனத் தலபுராணம் கூறுகிறது.

உலகப்படைப்பின் போது தேவர்கள் அனைவரும் இவ்வுலகமக்கள் வழிபட்டு உய்தற்பொருட்டு பிரமபுரீசுவரரையும் வாடாமுலையம்மை

யையும் பிரணவரூப விநாயகரையும் ஸ்தாபித்தும், தென்பால் பிரம குண்டதீர்த்தம் ஏற்படுத்தியும் வழிபட்டார்கள். பெருமான் தேவர்கட்கு அருட்காட்சி வழங்கியருளினுர் தேவர்கள், இத்தலத்தில் பிரம தீர்த்தக்கரையில் பிதுர்கருமங்கள், தானதருமங்கள் புரிந்து இறைவனை வழிபடுவோர்க்கு வேண்டியவரம் அளிக்குமாறுகேட்டுக்கொண்டனர். இறைவனும் அதற்கு இசைந்தருளி மறைந்தார்.

**கருங்குட்டம் நீங்கியது :** சோழமன்னன் ஒருவன் தீர்த்தயாத்திரை புறப்பட்டுப் புண்ணியநதிகள் பலவற்றில் நீராடிச் சிவதரிசனம் செய்துகொண்டு காவிரி நதிக்கரையை அடைந்தான். நாடோறும் காவிரிக்கரையில் அன்னதானம் சொர்ணதானம் முதலியன செய்து வந்தான். ஒருநாள் அந்தணன் ஒருவன் தன் மனைவியுடன் வந்து அன்னம் கேட்டான். அரசன் பரிசாரகனை அழைத்து அவர்களுக்குப் பசிதீர உணவளிக்குமாறு கட்டளையிட்டான். பரிசாரகன் அவர்களை அழைத்துச்சென்று உணவு கொடாமல் அந்தணன் மனைவியை இச்சித்தான் அப்பெண் தன்னைவிரும்பிய துட்டனுகியபணியாளனை அறியாமல் வேலைக்கமர்த்திப் பணிகொள்ளும் அரசன் கருங்குட்டம் அடையக்கடவது எனச் சபித்தாள். அரசன் தனது பிழையை உணர்ந்து ஆசிரியரை அடைந்து பரிகாரம் கேட்டான். ஆசிரியர் வில்வவனம் அடைந்து பிரமதீர்த்தத்தில் மூழ்கிப் பிரமபுரீசுரரை வழிபடின் பாவங்கள் அனைத்தும் நீங்கும் என்ருர். அரசனும் அவ்வாறே இத்தலத்தை அடைந்து அருள்மிகு பிரமபுரீசுரரை வழிபட்டுக் கருங்குட்டம் நீங்கப்பெற்ருன். ஆலயத்திருப்பணிகள் வாகனங்கள் மாசி பௌர்ணிமை தீர்த்த விழா முதலியன செய்வித்துத் தன்னூர் திரும்பினுன்.

**பிரமஹத்தி நீங்கியது :** காம்போஜ தேசத்தில் சோமதேவசர்மா என்னும் வேதப்பிராமணரின் சீடர்கள் அவரது வீட்டில் இரவில் உணவு உண்டு அயர்ந்து உறங்கும்போது விடுதீப்பற்றி இறந்தார்கள். சர்மா மிக்க மனவருத்தமடைந்து இத்தோஷம்தீரத் தலயாத்திரை மேற்கொண்டு இத்தலத்திற்கு வந்தார். சர்மாவைத் தொடர்ந்து வந்த பிரமஹத்தி விலகிநின்றது. இத்தலத்தை வழிபடுவோர் பிரமஹத்தி, கோஹத்தி, ஸ்ரீஹத்தி, சிசுஹத்தி முதலிய தோஷங்கள் நீங்கப்பெறுவர் என்று அசரீரி கேட்டது. சர்மா மனமகிழ்ச்சி அடைந்து ஆறு நாட்கள் தங்கிப் பிரம தீர்த்தத்தில் நீராடிப் பிரமபுரீசுரரை வழிபட்டு அருள்நலம் பெற்றுத் தம்நாடு சென்ருர்.

**காகம் முத்திபெற்றது :** பாண்டிநாட்டில் பிரமஸ்தலம் என்னும் ஊரில் சிவசர்மா என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தம் குல ஆசாரத்தைக் கைவிட்ட காரணத்தினுல் தாழ்ந்த

பிறப்புக்கள் பலவற்றை அடைந்தார். முடிவில் காக்கையாய்ப்பிறந்து அலைந்து திரிந்து இத்தலத்தை அடைந்தார். காக்கை பிரமதீர்த்தத்தில் மூழ்கி உடலைச் சிலிப்பிற்று. இவ்வேளையில் பருந்து ஒன்று காக்கையைத்துரத்திற்று. காக்கை பிரமபுரீசுரர் விமானத்தை மூன்று முறை சுற்றிவந்து கீழே விழுந்து உயிர் துறந்தது. இயம தூதர்கள் காக்கையின் உயிரைப் பற்றினுர்கள். இத்தலத்திறைவனை வழிபட்ட புண்ணியப்பயனுல் சிவகணங்கள் தோன்றி எமதூதர்களை அகற்றிக் காகத்தின் உயிரை இரதத்தில் ஏற்றிச் சிவலோகம் கொண்டு சென்றனர்.

**ஏமகிரீடன் இழந்தநாட்டைப்பெற்றது :** சாளுவதேசத்து அரசன் ஏமகிரீடன். நற்குணங்களின் இருப்பிடமாய் விளங்கிய இம்மன்னன் சிவபக்தியில் மேம்பட்டவனுகவும் விளங்கினுன். இவனுக்குப் படை பலம் மிகவும் குறைவு. இதையறிந்த அயல் தேசத்து அரசன் இவனுடைய நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு ஏமகிரீடனை நாட்டை விட்டுத் துரத்திவிட்டான். அவ்வரசன்பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருக்கடவூர் மயானம்வந்தான். இத்தலத்தின் சிறப்பை அறிந்து பிரமதீர்த்தத்தில் நீராடி வாடாமுலையம்மையையும் பிரமபுரீசுரரையும் வழிபட்டுஅருள்மிகு சிங்காரவேலர் சந்நிதியை அடைந்து மனமுருகிப் பணிந்தான் நாடிழந்த நிலையிலும் அம்மன்னன் மனம் தளராது அன்போடு வழிபடுவதை அறிந்த முருகப்பெருமான் அம் மன்னன் போலப் படையோடு சென்று பகைவரை நாட்டை விட்டு அகற்றினுர். மன்னன் கனவில் தோன்றி 'அரசனே உன்பகைவனை நம் சக்தியால் நாசமாக்கினேம் உன் நாட்டுக்குச்சென்று அரசாட்சி செய்' என்று அருள் செய்து மறைந்தார். விழித்தெழுந்த மன்னன் சிங்காரவேலனின் கருணையை வியந்து போற்றி ஆட்சியை மேற் கொண்டு இத்தலத்து இறைவன் திருக்கோயிலையும் சிங்காரவேலர் சந்நிதியையும் விளக்கமுறத் திருப்பணிகள் செய்வித்து விழாக்கள் கொண்டாடி மகிழ்ந்தான்.

**கோயிலமைப்பு:** கோயில் மேற்குநோக்கி அமைந்துள்ளது. கட்டைக்கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் இரண்டாம் பிராகாரம் விளங்குகிறது. வடபால் நந்தவனமும் வசந்தமண்டபமும் உள்ளன. தென்பால் அம்பாள் கோயில் கிழக்குநோக்கி அமைந் துள்ளது. சுவாமி சந்நிதியில் பலிபீடம் நந்தி மண்டபம் உள்ளன.

இரண்டாம் கோபுர வாயிலைக்கடந்து உள்ளே சென்ருல் முதற் பிராகாரம். மேல்பால் முருகனும் கஜலக்ஷ்மியும் விளங்குகின்றனர். அடுத்துவடபால் நடராஜசபை தெற்குநோக்கித் திகழ்கிறது. ஈசான திசையில் பைரவர் விளங்குகிருர். கீழ்பால் உள்ள மண்டபத்தில்

விசுவநாதர் சூரியபகவான் எழுந்தருளியுள்ளனர். தென்பால் உள்ள மண்டபத்தில் அறுபத்துமூவர் சித்திரம் எழுதப்பெற்றுள்ளது. தெற்குப் பிராகாரத்தில் பிரணவகணபதி, தனிக்கோயிலில் எழுந் தருளியுள்ளார். சுவாமி கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் வடபால் விநாயகர், துர்க்கை, பிர்மா ஆகியோரும் கிழக்கே இலிங்கோற்பவர், தெற்கே தக்ஷிணாமூர்த்தி கல்யாணசுந்தரர் முதலியோரும் எழுந்தருளி விளங்குகின்றனர்.

முன்மண்டபத்தைக் கடந்து உள்ளே மகாமண்டபத்தை அடையலாம். இங்கு வில்லேந்திய சிங்காரவேலர் எழுந்தருளி விளங்கும் சபை உள்ளது. இத்தலத்திற்குரிய சிறப்பு மூர்த்தியாக இவர் வழிபடப்பெறுகின்றார். சுவாமி சந்நிதியில் துவாரபாலகர் வாயிலைக் காக்க, அருள்மிகு பிரமபுரீசுவரர் எழுந்தருளி விளங்கும் சந்நிதியைத் தரிசிக்கலாம். அம்பாள்கோயில் தனியே வெளிப்பிராகாரத்தில் உள்ளது.

**தேவாரத்திருப்பதிகங்கள்:** இத்தலத்திற்கு மூவர் அருளிய தேவாரப்பதிகங்கள் மூன்று உள்ளன. மூன்று பதிகங்களிலும் இறைவன் திருப்பெயர் பெருமானடிகள் என்று குறிப்பிடப்படுகிறது. சுந்தரர் தேவாரத்தில் அம்பிகை திருப்பெயர் வாடாமுலையாள் எனக் கூறப்படுகிறது.

பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவரெம் பெருமான் அடிகளே.

என்று ஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பாடலும்,

உன்னி வானவர் ஓதிய சிந்தையில்
கன்னல் தேன்கட வூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னார் பெருமான் அடிகளே.

எனத் திருநாவுக்கரசர் அருளிய தேவாரமும்,

வாடாமுலையாள் தன்னோடும் மகிழ்ந்துகானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் தவம்அழித்து
நாடாவண்ணம் செருச்செய்து ஆவம் நாழி நிலையருள்செய்
பீடார்சடையார் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

எனச் சுந்தரர் அருளிய தேவாரமும் இத்தலத் திருப்பதிகங்களில் நம் நெஞ்சில் நிலைக்கும் பாடல்களாகத் திகழ்கின்றன.

**மூர்த்திகள்:** இத்தலத்து இறைவன் திருப்பெயர் அருள்மிகு பிரமபுரீசுரர். தேவாரத் திருப்பதிகங்களிலும் கல்வெட்டுக்களிலும் பெருமானடிகள் எனக் குறிக்கப்படுகிறது. அம்பிகை திருப்பெயர் அருள்மிகு வாடா முலையாள் வடமொழியில் அமலக் குயமின் அம்மை எனவழங்குவர். சுந்தரர் அருளிய திருப்பதிகத்தின் எட்டாது திருப்பாடலில் இப்பெயர் குறிக்கப்படுகிறது. விநாயகர் ஓங்காரகணபதி அல்லது பிரணவ கணபதி எனப்படுவார். இத் தலத்தில் சுவாமிக்கு அருகில் முருகப் பெருமான் சபை விளங்குகிறது. வள்ளிதெய்வயானை அம்மையார்களோடு வில்லேந்திய வேலராய் முருகன் பேரழகுடையவராய் அருட்காட்சிதருகின்றார். இவர் சத்துருசங்காரச் சிங்காரவேலர் என வழங்கப்பெறுகிறார். தலமரம் கொன்றை. **தீர்த்தம்:** கோயிலின் தென்பால் பிரமதீர்த்தம், பிரம குண்டம், பிரமசரஸ் என மூன்று தீர்த்தங்கள் உள்ளன. அருகில் திருக்கடவூர்ப் பெருமானுக்கு அபிடேகம் செய்தற்கென மார்க்கண் டேயர் பொருட்டு இறைவனால் வரவழைக்கப்பெற்ற அசுவதி தீர்த்தக் குளம் உள்ளது. இது மார்க்கண்டேய தீர்த்தம், மிருத்யுஞ்சய தீர்த்தம் எனவும் வழங்கப்பெறும். பங்குனி அசுவதியில் மார்க்கண் டேயர் தீர்த்தம்கொடுக்கும் காலத்தில் மட்டுமே மக்கள் இத்தீர்த் தத்தில் நீராடுவர். இத்தீர்த்தநீர் திருக்கடவூர்ப் பெருமான் அபிடே கத்துக்குமட்டுமே அபிடேக நீராகப் பயன் படுத்தப்பட்டுவருகிறது. பல ஆண்டுகள் எடுத்துவைத்திருந் தாலும் தண்ணீர் கங்கையைப் போலக் கெடாமல் புனிதநீராக விளங்குகிறது.

'இத்தீர்த்தநீரைப் பிற தெய்வங்களுக்கும் அபிடேகித்தால் என்ன' என்று கூறி மன்னன் ஒருவன் திருக்கடவூர் மயானத்து இறைவர்க்கு இத்தீர்த்த நீரை அபிடேகம் செய்யச் செய்தபோது சிவலிங்கத்தின் உச்சியில் வெடிப்பு ஏற்பட்டதெனக் கூறுகின்றனர். அதற்கேற்ப இறைவன் திருமுடியில் தழும்பு காணப்படுகிறது.

**கல்வெட்டு:** இவ்வூரில் பதினாறு கல்வெட்டுக்கள் இருக் கின்றன. பதினைந்து சோழர்களுடையனவும், ஒன்று பாண்டியனுடை யதுமாம். சோழர்கள் பிற்காலச்சோழர்களே. (12, 13 நூற்றாண் டினர்.) வீணைவாசிக்க, வேதம் ஓத, ஸ்ரீருத்திரம் சொல்லத்திட்டம் செய்யப்பட்டது. சுங்கம் தவிர்த்த குலோத்துங்கன் பதினாறும் நூற்றாண்டில் நிலம் அளக்கப்பட்டது. தீர்வை விதிக்கப்பட்டது. திருநந்தவனம் வைப்பதற்குத் தோட்டத்திற்கு ஆள் நியமனம் செய்யப்பட்டது. **ஊர்:** ஜெயங்கொண்ட சோழவளநாடு, ஆக்கூர் நாடு, திருக்கடவூர் என்று குறிக்கப்பட்டது. இந்நாட்டில் திருத் தொண்டத்தொகை மங்கலம், சிவபாதசேகரமங்கலம், திருநீற்றுச் சோழமங்கலம் என்ற ஊர்கள் கூறப்பட்டுள்ளன. சுவாமிபெயர் திருமயானமுடையபெருமான் என்று கூறப்பட்டுள்ளது.

**மதிப்புரை:**

# ஸ்ரீ மாருதி அந்தாதி

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்ருகிய அந்தாதியின் இலக்கணம் அமையப் பாடப்பெற்றது இந்நூல். சொல்லின் செல்வனுகிய ஸ்ரீ அனுமனின் பேராற்றலேயும் தெய்விகத்தன்மையையும் விளக்குகின்றது. இன்றும் பலர் அனுமனே உபாசித்து நலம்பல பெற்றுவருகின்றனர். அவ்வாறு தியானிப்பவர்க்கும், தியானிக்க முயல்பவர்க்கும் இந்நூல் சிறந்த துணையாகும். அனுமனுடைய இராமபக்தியும், ஆசிரியரின் அருளனுபவமும் பாடல்கள்தோறும் மிளிர்கின்றன. பல தோத்திர நூல்களே ஆக்கியளித்த ஆசிரியர் கலேமாமணி சுத்தசத்வானந்தா அவர்கள், இப்போது இந்த அரிய நூலேயும் தந்துள்ளார்கள். அனுமனேப்பற்றிய இரண்டு கீர்த்தனங்களும் நூலிறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளன. ஆசிரியரின் பணி பாராட்டுக்குரியது. கிரௌன் 1 × 16 பக்கங்கள் 16. கிடைக்குமிடம்: ஸ்ரீ சுத்தசத்வானந்தா, 14 சிங்காரி நாயக்கன்தெரு, மயிலாப்பூர், சென்னே 600 004.

★

# அகத்தியர் தமிழ் இலக்கிய வரலாறு உரைநூல்

மாணவர் உளங்கொளக் கற்பிக்கும் ஆற்றல்பெற்ற ஆசிரியர்களில் ஒருவர் புலவர்மாமணி நல்லாசிரியர் திரு. சு. அரங்கசாமி அவர்கள். மேல்நிலே, இளநிலே, இளங்கலேவகுப்பு மாணவர்களுக்கும் அரசு பொதுப்பணித்துறைத் தேர்வெழுதும் மாணவர்களுக்கும் உற்ற துணையாக ஆசிரியர் இந்நூலே ஆக்கித்தந்துள்ளார். சங்ககாலம் முதலாகத் தற்காலம்வரையுள்ள நூல்களேயும். நூலாசிரியர்களேயும், சைவமும் தமிழும் தழைக்கத் திருமடங்கள் செய்த தொண்டுகளேயும், புதினங்கள், சிறுகதைகள், உரைநடைகள் இவை வளர்ந்த முறையையும் ஓரளவு தொகுத்துத்தந்துள்ளார். பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியரால் தொகுக்கப்பெற்றமையின் இந்நூலேப் பயிலும் மாணவர்கள் தேர்வில் வெற்றிபெறுவர். மாதிரிவினுக்களும் இந்நூல் இறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளன. கிரௌன் 1 × 16. பக்கங்கள் 90. விலே ரு. 3—50. இந்நூல், திருச்சி தெப்பக்குளம் நந்திகோயில்தெரு அகத்தியர் புத்தகசாலே வெளியீடாக வெளிவந்துள்ளது.

# சைவத்தின் மேற்சமயம் வேறில்லை

வித்துவான். திரு. மு. வைத்தியநாதன், திருச்சி.

**உயிரும் இறைவனும் :**

உலகில் இன்று சிறந்து விளங்கும் சமயங்கள் கடவுள், உயிர், கடவுளை உயிர் அடைதற்கானவழி இவைபற்றியெல்லாம் விரித்துக் கூறுகின்றன. சமணம், கிறித்தவம், தீன் இஸ்லாம் முதலிய சமயங் கள் இறைவன் இருக்கும் இடம்தேடி உயிர்கள் செல்லவேண்டும் ; அப்படிச்செல்வதற்கான பரிபக்குவநிலைகளை முதலில் அவைகள் பெற வேண்டும் என்று விளக்குகின்றன.

ஆனால், நம் சைவசமயம் இறைவன், உயிர்கள் உள்ள இடந் தேடி வந்து, அவைகளின் தன்மைக்கேற்ப அருளுகின்றான் என்றும், இறைவன் எளிவந்த தன்மையுடையான் என்றும் தெரிவிக்கின்றது. குற்றமும் சிற்றறிவும் உடைய உயிர்களால் இறைவனைத் தேடிச் செல்லமுடியாது. கருணைக்கடலாக விளங்கும் அவன்தான் தன்னால் படைக்கப்பெற்ற உயிர்கள் கடைத்தேற அருள்புரிய வருகின்றான் என்கிறது.

திருஞானசம்பந்தர் திருநெல்வேலித் திருப்பதிகத்தில் உயிர் களுக்கு அருள இறைவன், தன் நிலையில் தாழ்ந்துவருதலை விளக்கி யுள்ளார். ' என்றும் ஓர் இயல்பினர் என நினைவு அரியவர், ஏறு அது ஏறிச், சென்றுதாம் செடிச்சியர் மனைதொறும் பலிகொளும் இயல்பு அதுவே " என்பது அவர்தம் திருப்பாட்டு. உயிர்கள், உலகியல் பொருட்களை அடைதற்காக ஆசைப்பட்டு உழல்வதைவிட்டு, அவை களின் அழியுந்தன்மை அறிந்து, அழியாப்பொருளாகிய பரம்பொருளை அடைய எண்ணுந்தருணத்தில், இறைவன் இரங்கிவந்து அருளு கின்றான்.

**பிற சமயங்களும் சைவமும் :**

சமணசமயம் மகாவீரரால் உருவாக்கப்பட்டது. புத்த சமயம் கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது. இயேசுநாதர் கிறித்தவ சமயத்திற்கு அடிப்படையிட்டார். நபிகள் நாயகம் தீன் இஸ்லாம் மார்க்கத்தை நெறிப்படுத்தினார். இச்சமயங்கள் எல்லாம் தனி மனிதர் களால் உருச்செய்யப்பட்டவை. அவர்கள் கூறிய வழியே வழி.

அவ்வழி செல்லவில்லையானால் நரகம் உறுதியாக உண்டு. பிற சமய வழிகள் தவறானவை என்பது அவைகளின் முடிவு. பிற சமயத்தவர் களைப் 'பாவிகள்' என்று அவர்கள் இகழத் தவறுவதில்லை.

ஆனால், சைவசமயம் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. இதைத்தோற்றுவித்தவர் யார்? என்ற வினா எழுமானால், உறுதியாக ஒருவரைக் குறிப்பிட்டு விடைகூற முடியாது. அது காலம் அறுதியிட முடியாத தொன்மையது. எந்நிலையினரையும் உயர்ந்தநிலைக்கு வழி நடத்திச்செல்வது. சைவ சமயப் பெரியார்களான நால்வர் பெரு மக்கள் தோன்றுதற்குமுன்பே, மக்களால் பின்பற்றப்பட்ட பழமை யுடையது. அவர்கள் பாடிய திருப்பதிகங்களுக்கு முன்பு, பல அருளாளர்களால் பாடப்பெற்ற அருட்பனுவல்களை உடையது. நால்வர் பெருமக்கள்கூட இறையன்பைப்பற்றிப்பாடி, மக்களை நல் வழிப்படுத்த உழைத்தார்கள். மற்ற மதத்தவர்கள்போல சமய மாற்றம் செய்யும் வேலையில் ஈடுபடவில்லை.

**உயிர்களின் வேலை :**

சைவம் என்பது ஒரு சட்டத்தொகுப்பு அன்று. நியதிகளை வரையறுத்துக்கூறும் நூல்தொகுதியன்று, சைவம் என்பது ஒரு குறிக்கோள் ஆகும். உயிரானது, தன் இயல்பையும் தன்தலைவன் இயல்பையும் முதலில் அறிதல்வேண்டும். அவ்வாறு அறிந்தபின், தன்வேலை தலைவனை அடைவதுதான் என்பதை உணரவேண்டும். இப்படி உணர்பவன், அன்றே சைவன் ஆகின்றான். அவன் எந்த இடத்தில், எந்தக்குடியில், எந்தமரபில் பிறந்தவன் ஆயினும், அவனிடம் இந்த உணர்வு – இந்தக் குறிக்கோள் உதயமாகிவிடுமா னல், அவன் முழுச்சைவன் ஆகின்றான்.

உயிர்கள் செய்யவேண்டுவது யாது? இறப்ப உயர்ந்தவனாகிய இறைவனிடம் செல்லவேண்டும் என்னும் உறுதி பெறுவதேயாகும். "சேவடிபடரும் செம்மல் உள்ளமொடு, நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும் செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன், நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப இன்னே பெறுதி. நீ முன்னிய வினையே" என்று முருகாற்றுப்படையாசிரியர் நக்கீரர் கூறுதல் காண்க. இந்தத் துணிவும் நம்பிக்கையும் உடைய மனம்பெற்றவனே சைவன் ஆவான். பிறசமயங்களுக்கும் சைவத்திற்கும் உள்ள வேறு பாடு இதுவே.

**இரண்டுநிலை :**

பரம்பொருளை வழிபடுதல் அடியார்களை வழிபடுதல் என்ற இரண்டுநிலைகளில், சைவர் ஏதொன்றையும் பின்பற்றலாம். மகா வீரரை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் சமணர் ஆகமுடியாது. கௌதம

புத்தரை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் பௌத்தர் ஆகமுடியாது. இயேசுநாதரை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் உண்மைக் கிறித்தவராகமுடியாது. முகம்மதுநபியை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் இஸ்லாமியர் ஆக முடியாது.

ஆனால், சைவசமய அடியார்களில் முதன்மையானவர்களான நால்வர்பெருமக்களை, அறியாமலே, ஒருவர் சைவராக இருக்கமுடியும். அவர் பரம்பொருளிடம் நம்பிக்கை கொண்டவராக இருந்தால் போதுமானதாகும். இதற்குச் சாக்கியர் என்னும் அடியார் வரலாற்றை எடுத்துக்காட்டாக எண்ணமுடியும். சாக்கியர் நால்வர் பெருமக்களை அறியாதவர். பல சமய உண்மையறிய காஞ்சிமாநகர் சென்றவர். அவர் ஆராய்ந்த எந்தச் சமயமும் அவருக்கு மனநிறைவைத் தரவில்லை. சைவசமய நெறியே காரணகாரியத்துடன் உயர்வழிக்கான விளக்கம் தெரிவித்தது. தினமும் மலர் எடுத்துச் சிவலிங்க வழிபாடு செய்த அவர் வேற்றுவடிவத்தில் இருந்தாலும் சைவராக விளங்கினர். சோதனைக்குப்பின் அருளப்பட்டார்.

**நம்பிக்கை வேண்டும் :**

சைவராகும் ஒருவர், உலகறிய பல சடங்குகளைச்செய்து, தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றநிலை சைவத்தில் இல்லை, அந்நெறியில் நம்பிக்கைவைத்தால், அதுவே ஏற்புடைத்தாகும், திருநாவுக்கரசர் சமணப்பாழி விடுத்துச் சைவத்திற்கு வந்தார். அப்பொழுது அவர் 'அறிவுக்குளியல்' செய்யவில்லை. 'கழுவாய்' இயற்றவில்லை. அவர் தமக்கையார் திலகவதியார் திருநீறு கொடுத்தார். அதைவாங்கி அணிந்துகொண்ட நாவுக்கரசர். சைவநெறித் தலைப்பட்டார். "திருவாளன் திருநீறு திலகவதியார் கொடுப்பப் பெருவாழ்வுவந்தது என்ன" ஏற்று அணிந்துகொண்டார் அப்பரடிகள்.

**அழியா அன்பு வேண்டும் :**

"யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அன்று; நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்" என்பது பரிபாடல் தொடர், இறைவனிடம் அழியும் பொருள்களை வேண்டுவதை விடுத்து, அன்பு என்னும் அழியாப் பண்பினை வேண்டுதல் சைவர் இயல்பு மனிதனின் உள்ளவளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்து விரிவுடையதாக விளங்குவது சைவம். மற்றச்சமயத்தவர்களும் அன்பினைப்பற்றிக் கூறியுள்ளனர். ஆனால், இறை, அன்பு என்று பிரித்து விளக்கம் தந்துள்ளனர். சைவம்தான், 'அன்புதான் சிவம்', 'சிவமே அன்பு' என வேற்றுமை விலக்கிக் கூறுகின்றது. மேலும், கடவுளுக்குச்

செய்வது மக்களுக்குப் பயன்படுகிறதோ இல்லையோ, மக்களுக்கு நேரடியாகச் செய்வது இறைவனுக்குச் செய்ததாகும் என்று கூறும் விறுபடைத்த சமயம் சைவமே.

**மாவீரர் :**

பல்வேறு இடையூறுகளைக்கடந்து, தடைகளைவென்று விளங்கிய மாபெரும் வீரர்களை உடையது சைவநெறி. அமணர்கள், திருநாவுக்கரசருக்கு நஞ்சுகலந்த உணவு ஊட்டினர்; யானையைக்கொண்டு இடறிக் கொல்ல ஏற்பாடு செய்தனர்; நீற்றறையில் இட்டனர்; கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சினர். இவ்வாறு செய்த சமணர்கள்மீது அவர் எந்தக் காழ்ப்பும் கொள்ளவில்லை. அவர்களை அழிக்க முற்படவில்லை. "வழக்கிலா அமணர்" என்றுமட்டும் கூறினர். அவர்தம் பெருமை விளக்கவல்லது அன்று.

**செயலின் பின்விளைவு :**

சைவம் நுட்பமான தன்மைகளை ஆராய்ந்து, அத்தன்மைகளுக்கு வடிவம் தரக்கூடியது. ஒருவர் செய்கிற செயலுக்கு முக்கியத்துவம் தராமல், அச்செயலின்பின்னேயுள்ள மனநிலையின் தூய்மைக்கு மதிப்புத்தருவது சைவம். கரும்பை வளைத்து மலரம்பு போட்ட மன்மதன் சிவபிரானல் எரிக்கப்பட்டான். தந்தையின் காலைக் கோடரியால் வெட்டிய சண்டீசர் அருளப்பட்டார். மலரம்பு போடுதலும் காலைவெட்டுதலும் வேறுபாடுமிக்க செயல்கள். ஆனல், மலர் அம்பு போட்டவனின் செயலுக்குப்பின் வஞ்சகமனம் உள்ளது. காலைவெட்டியவர் செயலுக்குப்பின் மனத்தூய்மை உள்ளது. மனத்தூய்மை அருள்நிலை வழங்கியது. "கரும்பு பிடித்தவர் காயப்பட்டார், ஆங்கோர் கோடரியால் இரும்பு பிடித்தவர் இன்புறப் பட்டார்" என்பது அப்பர்தம் திருப்பாடல் தொடர்.

**மனத்தூய்மை :**

மனத்தூய்மைக்கு மதிப்பளிக்கும் சமயம் சைவசமயமே. பூசலார் என்னுஞ் சிவனடியார் உள்ளத்தெழுந்த ஆசையால் எம்பெருமாற்கு ஓர் ஆலயம் எடுக்க முயன்றார். பலரிடம் உதவிநாடினர். மனத்தூய்மையுடைய அவர் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றியளிக்க வில்லை. அதற்காக அவர் கலங்கவில்லை. தம் மனநினைவிலேயே அடிப்படையிட்டார். முறைப்படி எதுவும் தவருமல் செய்துமுடித்தார், பெருமானை எழுந்தருளச்செய்ய நாள்குறித்தார். அவர் குறித்திருந்த நாள்தான், காடவர்கோன் கழற்சிங்கன் தான் மிகுந்த பொருட் செலவில் கட்டியிருந்த கற்றளியில் இறைவனை எழுந்தருளுச்செய்ய,

முடிவுசெய்த நாளாகும். பெருமான், பூசலார் எழுப்பியுள்ள ஆலயத்திற்குத் தான் செல்ல இருப்பதால், வேறோர்நாள் குறித்திட அரசற்கு அறிவித்தார். பூசலார் கட்டிய உள்ளக்கோயிலில் எழுந்தருளி அவரை மகிழ்வித்தார். இந்த ஒரு வரலாறு உலக இலக்கியங்களில் வேறு எங்குத்தேடினாலும் கிடைத்திடாது. சைவம் இத்தகைய தனித்தன்மை உடையது.

**அச்சம் வேண்டாம் :**

சைவசமய அருளாளர்கள் தாம் வாழ்ந்தகாலத்திலிருந்த சமுதாயத்தைக்கண்டு எந்தநிலையிலும் அஞ்சியதாகத் தெரியவில்லை. இந்த உலகில் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்சவருவதும் இல்லை" என்று நாவுக்கரசர் கூறியிருப்பது கண்டு, எதற்கும் அஞ்சிநடுங்கும் இன்றைய சமுதாயம் மனத்துணிவு பெறவேண்டும். அந்த அளவிற்குத் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும். சமணர், பௌத்தர் முதலாய "ஈனர்கட்கு எளியேன் அல்லேன், திருவாலவாய் அரன் முன்நிற்கவே" என்று ஞானசம்பந்தர் பாடியுள்ளது கண்டும் சமுதாயம்பற்றிய அச்சம் அவரிடம் இல்லாமை அறியலாம். இத்தகைய மனத்துணிவுடைய அருளாளர்களைப்பெற்றது சைவம்.

நாளுங்கோளுங்கண்டு அஞ்சவேண்டிய அவசியம் சைவசமய அடியார்கட்கு இல்லையாம். அவைபற்றிய நடுக்கம் தேவையில்லையாம். அவர்கட்குத் திருப்பதிகங்கள் கரைசேர்க்கும் புணையாக உள்ளதாம். "தான் அமர் கோளும் நாளும் அடியாரை வந்து நலியாதவண்ணம் உரைசெய் ஆனசொல்மாலைஓதும் அடியார்கள், வானில் அரசாள்வர். ஆணைநமதே" என்று பாடிய அருளாளரைப்பெற்றது சைவசமயமே.

**முதுமை நினைத்து இரங்கவேண்டாம் :**

உடலுக்கு முதுமை உண்டு. மரணம் உண்டு. இது இயற்கையின் நியதி. எனவே முதுமையை நினைத்தோ, மரணத்தை எண்ணியோ எவரும் அஞ்சவேண்டாம். அவ்வாறு அஞ்சுவது அறியாமையாகும் என்று அறிவிப்பது சைவம். இறைவனைக் குறித்துப் போற்ற வாய் உள்ளது; நா உள்ளது; அவனை வழிபட மலர்களும் தூயநீரும் உள்ளன. நினைத்து வணங்கிட செஞ்சடையப்பன் உள்ளான். வணங்கும் செயலைச் செய்திட நாம் உள்ளோம். இவை எல்லாம் இருக்க, என்னகாரணத்தால் எமனின் கோபங்கண்டு அஞ்சவேண்டும் என்று கேட்டு உணரவைப்பது சைவம்.

"கற்றுக் கொள்வன வாயுள, நாவுள,
இட்டுக் கொள்வன பூவுள, நீருள,
கற்றைச் செஞ்சடை யான் உளன், நாமுளோம்;
எற்றுக்கோ நமனால் முனிவு உண்பதே"

என்று நாவுக்கரசர் பாடிய நலஞ்சான்றது சைவம்.

**உண்மை வழிபாடு :**

கங்கையில் ஆடினாலும், காவிரியில் மூழ்கினாலும், பொங்கு தண் புனல் மூழ்கி எழுந்தாலும், ஈசனைப்பற்றிய நினைவு இல்லாதவர்கட்கு எதுவும் இல்லையாம் என்னும் உண்மையை அறிவிப்பது சைவம். போலியான வழிபாடுகள் செய்வோர்செயல், இறைவனுக்கு உகந்த செயல் அன்று. அவனால், அது இகழப்படும். "பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு, நக்குநிற்பன் அவர்தமை நாணியே" என்று கூறி, உண்மைவழிபாட்டு நிலைக்கு வழிவகுத்தது சைவசமயமே.

**ஒருமைப்பாட்டு உணர்வு :**

எந்த வேற்றுமையும் பாராட்டாமல் ஒருமைப்பாட்டுணர்வைப் பண்டே வலியுறுத்தியதும் சைவமேயாகும். பாணராகிய திருநீல கண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தருடனிருந்து தொண்டு செய் திருக்கிறார். அந்தணர், அல்லாதார் என்ற வேறுபாடு அவர்களிடம் தலைகாட்டவில்லை. பெரியபுராணம் முழுவதும் தேடினால் 'ஐயர்' என்ற சொல் ஒன்பது இடங்களில் வருவதை அறியலாம். இதில் நான்கு இடங்களில் அச்சொல் இறைவனைக்குறிக்கின்றது. திருநீல கண்டயாழ்ப்பாணரையும் திருநாளைப்போவாரையும் தில்லைவாழ் அந்தணர்கள் 'ஐயர்' என்றே அழைக்கின்றனர். அன்புருவாய கண் ணப்பர் 'ஐயர்' என்று போற்றப்படுகின்றார். வேறுபல அடியார்பிறந்த மரபால் வேறுபட்டவராக இருந்தபோதும் சமயச் சான்றோர் வரிசை யில், யாவரும் ஒரு தன்மையராகவே விளங்குகின்றனர்.

**உத்தமர் உறையுள் :**

ஒருநாள், ஐந்துவயது பாலகராகிய மெய்கண்டதேவரைக் கண்டார் அருணந்திசிவம். அப்பிள்ளையின் அற்புதத்திறன் அறிந்த அருணந்திசிவம், அச்சிறுவரிடம், ஆணவமலத்தின் இலக்கணம் யாது? என்று கேட்டார். பாலகராகிய மெய்கண்டதேவர், கேட்ப வரையே விரல் சுட்டிக் காட்டினார். அருணந்திசிவம் தன்னிடம் இருந்த குறையுணர்ந்தார். அதைச் சுட்டியுணர்த்திய மெய்கண்ட தேவரைச் சிறுவர் என்று நினைக்காமல், அவரையே தன் ஆசிரியராக ஏற்றுக்கொண்டார். இத்தகைய உத்தமர்களைக்கொண்டது சைவம்.

**மொழி ஒரு கருவி :**

சைவ சமயத்தின் உயர்ந்த கருவூலங்கள், ஞானபண்டாரங்கள் என்று போற்றப் பெறுவன பன்னிருதிருமுறைகள். இவை இடைக் காலத்தில் அச்சமயவளர்ச்சிக்கு மிகவும் உதவின. தமிழ்மொழி

வளர்ச்சிக்கும் உரமூட்டின. தமிழும் சைவமும் இரண்டானவை அன்று, ஒன்றுனதே. மனிதவாழ்வின் உயர்விற்காகப் படைத்துக் கொண்ட நாகரிகக் கருவிகளுள் சிறந்த கருவி மொழியே யாகும், அம்மொழிதான் சிந்தனை ஓட்டங்களை, எண்ண அலைகளை, உணர்ந்த கருத்துக்களை, அனுபவ உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவும். அவைகளுக்கெல்லாம் வடிவம் கொடுக்க உதவும்.

## இலக்கியம் :

அந்த மொழியை ஊடுபொருளாகக்கொண்டு அமைவதுதான் இலக்கியம். ஒரு நாட்டுமக்களின் விருப்பங்களை, வெறுப்புகளை, நம்பிக்கைகளை வெளியிட இலக்கியம் அவசியமாகிறது. சுவையுணர்வுகளை வளர்க்கவும், வகைப்படுத்கவும் அது உதவுகிறது, மனித வாழ்வை மாற்றியமைக்கும் ஆற்றல் அதற்கு உண்டு. அது நிலைத்த வாழ்வு உடையதாகும். காலத்தை வென்று விளங்கக்கூடியதாகும். சங்ககாலத்து இலக்கியங்கள், அக்கால மக்களின் கொள்கைகளை, பண்பு நலன்களை, ஆட்சி அமைப்புக்களை, வாழ்வியல் ஒழுங்குகளை, அகமும் புறமும்பற்றிய செய்திகளை உண்மைவரலாருக எடுத்து விளக்கும் தன்மையன. ஆனுல், இடைக்காலத்து இலக்கியங்கள் சமயச்சார்பு உடையன.

## சைவ எழுச்சி :

தமிழ் நாட்டைக் களப்பிரர்கள் என்னும் அரச மரபினர் ஆண்ட போது, அவர்கள் ஆதரவுடன் சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குடன் இருந்தன. அக்காலத்தில் அச்சமய இலங்கியங்கள் பல தோன்றின. பாண்டியன் கடுங்கோனின் எழுச்சியாலும், பல்லவர் படையெடுப்பாலும் களப்பிரர் அழிக்கப்பட்டனர். இச்சமயத்தில் தான் உண்மை அருளாளர்களான நால்வர் பெருமக்கள் அரும்பாடு பட்டுச் சைவசமயத்தை மீண்டும் உயிர்பெறச் செய்தனர். இந்தச் சமய எழுச்சி காரணமாக நாடு முழுவதும் பக்தி வெள்ளம் பெருகின. பாமரர்களிடம் பரவிய சைவ சமயம், பாராண்ட மன்னர்களையும் பற்றத்தொடங்கியது. மக்கள் கூட்டத்துடன் வேந்தர்களும் சமயம் மாறினர். ஞானசம்பந்தரின் நன் முயற்சியால், கூன்பாண்டியன் நின்றசீர்நெடுமாறன் சைவன் ஆனுன். அப்பரின் உறுதிப்பாட்டால் பல்லவன் மகேந்திரன் சைவனுக மாறினுன். பக்தி இயக்கம் தொடங்கி மக்கள் ஆலயவழிபாடு செய்யத் தொடங்கினர். பக்திப் பாடல்கள் பிறந்தன. பண்ணேடு இயைந்து இசை மணம் பரப்பின, சைவசமய எழுச்சிகாரணமாகத் தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் வளம்பெற்றன.

**திருமுறைகள் ;**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார் போன்ற அருளுடைச் சான்றோர் கள், இறைவன் திருவருள் இன்பத்தில் திளைத்தவர்கள். தாம் துய்த் துணர்ந்த பெருநலன்களை எல்லாம் மக்கள் அனைவரும் பெற்று இன்புறவேண்டும் என்னும் அவாவினால், தெளிவும் இனிமையும் பொருந்திய செந்தமிழ்ப் பாடல்களைத் திருப்பதிகங்களாகத்தந்தனர். இவர்கள் திருப்பதிகம்பாட அடிப்படையிட்டவர், காரைக்காலம்மை யார் என்னும் கற்பின் பெருந்தக்கார். இவரின் 'மூத்த திருப்பதிகம்' திருமுறை நூல்கள் தோன்ற வழிசெய்ததாகும். பல்வேறு காலங்களில் வாழ்ந்த அருளாளர்கள் பாடிய அருட் பனுவல்கள் திருமுறையாகத் தொகுக்கப்பட்டன. பன்னிருதிருமுறைகளைப்பெற்று, அவைகளால் உயர்வடைந்தது சைவசமயம்.

**திருநீறும் திருமுறையும் :**

சைவம் வளர வளர்ந்த நூல்களாகிய தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைநூல்பாடல்களைப் பொருளுணர்ந்து ஓதுதல்வேண் டும். ஒரு நிமிடமாவது தம்மை மறந்து படித்தல் வேண்டும். காத லாகிக் கசிந்து, கண்ணீர்மல்க ஓதிப் பழகவேண்டும். மலங்கெடுத்து மனங்கரைத்து நம்மை உய்திபெறுமாறு செய்வன திருமுறைப் பாடல் கள். அவைகளில் "ஒல்லை ஆறி, உள்ளம் ஒன்றிக், கள்ளம் ஒழிந்து, வெய்ய சொல் ஆறி" ஈடுபடவேண்டும். திருமுறையும் திருநீற்றை யும் விட அகத்தையும் புறத்தையும் தூய்மை செய்யவல்லவை வேறு எதுவும் இல்லையாம்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

**சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்**

இன்று இத்திருக்கோயிலுக்குவந்து தரிசனம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எல்லாம்வல்ல இறைவன் அருளால் ஆலய நிர்வாகம் சீரும் சிறப்பும்பெற்று நன்கு இயங்கிவருகின்றது. திருக்கோயிலின் புறமும் உள்ளும் தூய்மையாய் வைக்கப்பட்டு இறைவணக்கத்திற்கு இனிமையாகவும் சுமுகமாகவும் உள்ளது. இக்கோயில் நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றியுடன் வாழ்த்தும் உரித்தாகுக.

(ஒப்பம்) அ. சோமசுந்தரம்.

23—9—1979. மாவட்ட நீதிபதி, நாகப்பட்டினம்.

# பொம்மலாட்டம்

## சிவமணி புலவர். திரு. ம. சிவசம்பு பி. லிட்.

தமிழ்நாட்டில் பாவைக்கூத்து, பொம்மலாட்டம் முதலியவை சிறந்த கிராமக்கலையாகும். தோலாலும், மரத்தாலும் பொம்மைகளைச் செய்து, கயிறுகளைக்கட்டி அவைகளை ஆடவைப்பர். பொம்மைகளை ஆட்டுகின்றவர் திரைக்குப்பின் இருந்துகொண்டு பொம்மைகளை இயக்குவர். பொம்மை ஆடுவதைக்கண்டு நாம் எல்லோரும் மகிழ்கிறோம். அவ்வளவே. இப்பொம்மலாட்டத்தைச் சிவஞானிகள் காணுகிறார்கள். அவர்களுக்குப் பெரிய உண்மைகள் விளங்குகின்றன. பொம்மையை ஆட்டுகின்றவன் திரைக்குப்பின்னால் இருக்கிறான். பொம்மைகளை ஆட்டுகின்றபொழுது அவனும் ஆடுகின்றான்; பொம்மைகளையும் ஆட்டுகின்றான். ஆட்டுகின்றவனும் கயிறும் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. பொம்மைகள் தாமே ஆடுவதுபோல் தோன்றுகின்றன.

இறைவனும் இவ்வாறே நம்மையெல்லாம் ஆட்டுகின்றான். மாணிக்கவாசகர், 'கோன்ஆகி யான் எனதுஎன்று அவர் அவரைக் கூத்தாட்டுவானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே' என்கிறார்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

என்று கூறுகிறார் திருநாவுக்கரசர்.

---

திருநெல்வேலிசந்திப்பு தருமபுரஆதீனமடத்தில் ஞாயிறுதோறும் நடைபெறும் திருவாசகச் சொற்பொழிவில் 7—10—79 ஞாயிறு அன்று பேசியதன் சுருக்கம்.

நம் தருமையாதீனக்குருமுதல்வர் குருஞானசம்பந்தர் இப்பொம்ம லாட்டத்தை மிக அழகாகச் சிவபோகசாரத்தில் விளக்கியுள்ளார்.

நாம் எல்லோரும் பொம்மைகள். நாம் செய்த கன்மமெனும் கயிற்ருல் சிவன் நம் எல்லோரையும் ஆட்டுகிருன். நாம் ஆடுகிறேம். ஆனுல் அதை உணராமல் நம்செயலால் எல்லாம் நடக்கிறது என்று நினைக்கிறேம். இது நகைப்புக்கு இடமல்லவா? பாடலைப் படித்துப் பாருங்கள்!

வன்மைபுரி காயம் மரப்பாவை தன்னை அரன்
கன்மமெனுஞ் சூத்திரத்தால் கட்டியே — நன்மைதின்மை
ஆட்டுவது நாடா(து) அறிவிலார் தம்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை.

— சிவபோகசாரம் 90.

வினைவயத்தால் ஒழுக்கம், விரதம், தவம், ஞானம் முதலியன செய்யாமல் தோற்பாவைபோல் கூத்தாடிச் சுழன்று விழுந்து கிடந்தேன்; நான் வினைக்கேடன் என்பாய்போல் இனையன் நான் என்று உன்னை அறிவித்து அன்புகாட்டி ஞானம்கொடுத்து, குரு வடிவான அழகையும் காட்டி என்னை ஆண்டாய்; இறைவனே! என்று உன்னைக் கூடுவது என்கிருர் மாணிக்கவாசகர்.

இவ்வுடம்பைத் தோற்பாவை என்கிருர் மாணிக்கவாசகர். மரப் பாவை என்ருர் குருஞானசம்பந்தர். பாவைகளாகிய நாம் பரமனை அடைய அருட்பாடலைப் படித்துப் பயன்பெறுவோமாக.

சீலமின்றி நோன்பின்றிச்
செறிவேயின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி, வழிகாட்டி,
வாரா வுலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்ருே கூடுவதே.

— திருவாசகம்

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. சந்தானராமன்,
M. A., B. Lit., D. P. P. A., D. U. N. I. U.

## ஐங்கரன் ஏற்றம்

### கணபதி காப்பு

1. தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமை மைந்தனே! உலகேழும் பெற்ற
சீரபிராமி யந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

### அ. தாரமர் கொன்றையும் சண்பக மாலையும்.

1. இறைவனுக்குப் பிடித்தது கொன்றை மலர். "சாம்பேய குசுமப் பிரியை" என்ற லலிதா சகஸ்ரநாமப்படி அன்னைக்குகந்தது சண்பகமலர். இவை இரண்டினையும் ஒருங்கே கூறி அம்மையும் அப்பனும் ஒன்ருகிய அர்த்தநாரீச வடிவினை அபிராமிபட்டர் நினைவு கூர்கின்ருர்.

2. ஞானப்பாலுண்ட சம்பந்தர் தம் தேவாரத்தினையும் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கி அர்த்தநாரீச வடிவினையே குறிப்பிட்டார். அன்னையின் அருட்பாலுண்ட ஆளுடைய பிள்ளையின் வழியில் அபிராமிபட்டரும் துவங்குவதில் வியப்பில்லை.

3. அம்மையப்பனுடன் கூடிய விநாயகனை வேண்டுகிருர். இறைவனுக்கும் இறைவிக்கும் இடையில் முருகன் அமர்ந்திருக்கும் கோலத்தினைச் "சோமாஸ்கந்த ரூபம்" என்பதுபோல் அம்மையப்பனுக்கு நடுவில் கணபதி வீற்றிருக்கும் திருக்கோலம் "சோம கணபதி வடிவம்" எனப்படும். இவ்வடிவினைக் காஞ்சியை அடுத்த "தேனம்பாக்கம்" ஆலயத்தில் காணலாம்.

---

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 22—9—79 முதல் நவராத்திரி நாட்களில் நிகழ்த்திய தொடர்ச் சொற்பொழிவின் சுருக்கம்.

4. கணபதியினை வேண்டாது திரிபுரமெரிக்கச் சென்றபொழுது இறைவனின் தேரச்சு ஒடிந்தது. அவ்வாறே பண்டாசுரயுத்தத்தின் போது லலிதாம்பிகைக்கு 'ஜய விக்னம்' ஏற்பட்டது. பண்டனின் சகோதரன் விசுக்கிரன் ஜய விக்னயந்திரமொன்றைத் தாபித்தான். அது ஏவல் தகட்டைப் போன்றது. அதன் காரணமாக அம்பிகையின் வெற்றிக்குத் தடையேற்பட்டது. விநாயகர் தனது துதிக்கையினாலேயே அதனைத் தகர்த்து வெற்றிகிட்டும்படி செய்தார். ஆகவே அம்பிகைக்கும் இறைவனுக்கும் உற்றுழி உதவிய கணபதி தனக்கும் அருளவேண்டுமென எண்ணினர் பட்டர். அவர்களுடன் விளங்கும் நீ எனது அந்தாதியும் தடையின்றி, தமிழ்மாலையாகப் பெருக அருள வேண்டுமென்றார்.

### ஆ. தில்லை ஊரர்தம் பாகத்து உமை மைந்தன்.

திருக்கடவூரில் பாடியவர் தில்லையை நினைந்தது ஏன் ?

1. இறைவனை அல்லது இறைவியைப் பாடவோ அல்லது பேசவோ துவங்கினால் 'திருச்சிற்றம்பலம்' என்று தில்லையை நினைந்து துவங்குவது சைவர்களின் மரபு.

2. தில்லையினைத் தரிசித்தவளவில் எல்லாச் சிவத்தலங்களையும் தரிசித்த பலன் கிட்டும் என்று சைவர்களும், திருவரங்கத்தினைச் சேவித்தால் எல்லா வைணவத் தலங்களையும் சென்று சேவித்தபலன் கிட்டுமென்று வைணவர்களும் கூறுவர். இத்தில்லையில் அத்திருமாலும் கோவிந்தராஜப் பெருமாளாகப் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் காட்சி தருவதால் 'தில்லை' யென்ற அளவில் சைவ வைணவத் தலங்கள் அனைத்தையும் நினைத்த பலன் தனக்கும் தன் பாடலை ஓதுவார்க்கும் கிட்டும்வண்ணம் காப்புச் செய்யுளில் தில்லையினைக் குறிப்பிட்டார்.

3. நடராஜப்பெருமானின் 'டமருகம்' என்னும் உடுக்கையொலியிலிருந்து 'மூலவொலிகள்' எழுந்தன. அவ்வொலிகளைக் கிரகித்து, பாணினி வடமொழிக்கு இலக்கணம் படைத்தார். அகத்தியரும் அவ்வாறே கிரகித்து, தமிழுக்கு இலக்கணம் வகுத்தார் எழுத்தெண்ணிப்பாடும் கலித்துறைப்பாக்களால் இயற்றப்படும் இவ்வந்தாதியும் இலக்கணம் குன்றாது அமையவேண்டி, மூலவொலி பிறந்த தில்லை மூதூரை நினைந்தார்.

4 சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணத்திற்குத் தில்லையம்பலவாணனே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினான். அவ்வாறு புலவர்களுக்குத் தக்க சமயத்தில்

அருள்செய்தவர் பெருமான் ஆதலின் இவ்வந்தாதியும் தடையின்றிப் பூர்த்தியாகவேண்டி, அத்தில்லைப் பெருமான் புதல்வனுகிய கண பதியை வேண்டினுர்.

5. ஸ்ரீமத் அப்பையதீட்சிதர் என்னும் சைவப் பெரியார் தில்லை யில் வாஜபேய யாகம் ஒன்று நடத்தினுர். அதன் பூர்த்தியில் "அபபிருதஸ்னனம்" நடந்த சமயம். அப்போது தஞ்சையினை ஆண்டுவந்த சாளுவ மன்னன் வீரநரசிம்மன் ஸ்ரீ தீட்சிதர் அவர் களுக்குத் தானே குடைபிடித்துக் கௌரவித்தான் என்பது வரலாறு. அதே தஞ்சாவூரில் இருந்து அரசாளும் சரபோஜிமன்னன் ஒரு தேவி உபாஸகனைப் 'பித்தன' என்று அறியும் சோதனையில் இறங்கிவிட் டானே என்ற வேதனையில் ஸ்ரீ அப்பையதீட்சிதர் தஞ்சைமன்னனல் கௌரவிக்கப்பட்ட தில்லை பட்டர் நினைவில் வந்திருக்கக்கூடும்.

6. வியாகர்ண சாஸ்த்திரம் என்னும் இலக்கண வியலுக்கு அதிதேவதை ஆதிசேஷன் ஆவார். அவர் பதஞ்சலி முனிவராக அவதரித்து, தில்லையில் தங்கி, ஆயிரம் மாணவர்களுக்கு வியாகர்ண பாஷ்யம் உபதேசித்தார். தான் இயற்றும் அபிராமி அந்தாதி இலக்கண நயங்கள் அனைத்தும் குன்ருது அமைய வியாகர்ண சாஸ்த் திரத்தின் அதிதேவதை அவதரித்து 'பாஷ்யம்' செய்த தில்லையினை நினைந்தார்.

7. அப்பதஞ்சலியே யோகசாஸ்த்திரத்துக்கும் "சூத்திரம்" இயற்றியிருக்கிருர். குண்டலினியோகப்படி சகஸ்ர கமலத்தில் அன்னையின் தரிசனத்தைக் கண்டு வந்த நேரத்திலேயே சரபோஜி "என்ன திதி?" என்று கேட்டான். ஆகவே யோகசாஸ்த்திர மூல புருஷர் அவதரித்த தில்லையை நினைந்தார்.

8. அமுதகலசத்தை மறைத்துவைத்தமையால் திருக்கடவூர் தல விநாயகர் கள்ளவாரணப்பிள்ளையார் அல்லது 'சோரகணபதி' என அழைக்கப்படுகிருர். அவர் அபிராமிபட்டரின் வாக்கையும் 'சோரம்' செய்துவிடக்கூடும்; அல்லது மறைத்துவிடக்கூடும். ஆத லின் தில்லையில் இருக்கும் கணபதி "கற்பகவிநாயகர்". நினைத்ததை அளிக்கும் அவ்விநாயகரை அந்தாதி இனிதே முடிய வேண்டினுர்.

## இ உலகேழும் பெற்ற சீரபிராமி

1. அபிராமி ஏழுலகினையும் பெற்றவள். ஆகவே அவளது பெருமை பேசுதற்குரியது. ஒரு குழந்தை அல்லது சில குழந்தை களைப்பெறும் தாயின் சிறப்பு போற்றுதற்குரியது. உலகேழும் பெற்ற வளின் சிறப்பைப் பாடவேண்டியது கவிஞனின் கடமையன்ருே?

2. ஒரு நூலின் தலைவன் அல்லது தலைவிக்கு அதன்கண் போற்றிப் புகழத்தக்க இயல்புகள் இருத்தல் வேண்டும். (புகழ், அருள், கொடை, கல்வி முதலிய சிறப்புகள்). அவ்வியல்புகள் உடையவனையே வான்மீகியும் பாட விரும்பியதாக இராமாயண வரலாறு கூறும், அபிராமியோ அவ்வியல்புகள் முற்றும் உடையவள். அவள் உலகேழும் பெற்ற சீரபிராமி. எனவே அவளுக்கு அந்தாதி பாடுகின்றேன் என்றார்.

3. லலிதா சகஸ்ரநாமத்தின் முதல் 'நாமா' அவளை 'ஸ்ரீமாதா' என்று சிறப்பிக்கிறது. அகிலாண்டகோடியீன்ற அவள் சாதாரண மாதா அல்ல. ஸ்ரீமாதா. அதேமுறையில் அபிராமியும் 'சீரபிராமி'.

### ஈ. காரமர் மேனிக் கணபதி

1. பவளம்போல் சிவந்த திருமேனியுடைய கணபதியினை மேகம்போல் கறுத்த மேனியுடையவனாக வருணித்தார். மேகத்தினைப் போல் தான் கவிதைமழை பொழிய, மேகம்போல் அருள்மழைபொழிய வேண்டி அங்ஙனம் குறித்தார்.

2. கரிய நிறமுடைய பார்வதியின் அருகில் இருப்பதால் அவளது திருமேனியின் 'காந்தி'யினால் விநாயகனும் (சோமகணபதி) அந்நிறத்தோடு காணப்படுகிறான் எனலாம். கரியதிருமால் பள்ளி கொண்ட வெண்மைநிறம் உடைய பாற்கடலைக் "கருங்கடல்" என்று கம்பன் கூறியது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

3. மற்றும் மேகம், காலம் நேரம் கருதாது வேறுபாடு பாராமல் அனைவருக்கும் மழையினைக் கொடுக்கிறது. அதுபோல் என்னையும் வேறுபாடு பார்த்துத் தள்ளாமல் கருணை பொழியவேண்டுமென்று குறிப்பிடும் வகையில் "காரமர் மேனிக் கணபதி" என்றார்.

### உ. அம்மையப்பனுக்கே அடைமொழி அதிகம்! ஏன்?

இக் காப்புச்செய்யுளைக் கணபதிக்கே சூட்டினார். ஆயினும் பாட்டின் பெரும்பகுதி அம்மையப்பனுக்கே அடைமொழியாக அமைந்தது. " உமை மைந்தன் " ' காரமர் மேனிக் கணபதி ' ஆகிய சிறு பகுதிகளே கணபதிக்குக்கிடைத்தது.

அண்ட சராசரங்கள் அனைத்தையும் அம்மையப்பனிடமே கண்டு, அவர்களையே வலம்வந்து கனிபெற்ற ஞானவிநாயகன், அவர்களைப் புகழ்ந்தாலே மகிழ்ந்து அருள்செய்துவிடுவான் என்று அபிராமி பட்டர் கருதினர் போலும்.

(தொடரும்)

# ஐயனார் வழிபாடு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 5. ஆகமங்களில்

சாஸ்தா என்ற சொல்லுக்கு உலகங்களை ஆள்பவர் என்றும் ஆணைசெய்பவர் என்றும், மக்கள் மனங்களில் ஊடுருவியவர் என்றும் பொருள்கள் கூறப்படுகின்றன.

ஐயனார் பதினாறு பேதங்களை உடையவர் என்று தியானரத்னாவளி என்ற ஆகமபத்ததி கூறுகிறது. ஐயனாரின் பதினாறு பேதங்கள் :- 1. மதகஜசாஸ்தா, 2. மோகினிசாஸ்தா, 3. அமிருத சாஸ்தா, 4. கிராமசாஸ்தா, 5. உக்ரசாஸ்தா, 6. வீரசாஸ்தா. 7. லக்ஷ்மீசாஸ்தா, 8. பாலசாஸ்தா, 9 மதனசாஸ்தா, 10. பீஷண சாஸ்தா, 11. ருத்ரசாஸ்தா, 12. வரதசாஸ்தா, 13. அசுவசாஸ்தா, 14. சௌந்தரசாஸ்தா, 15. புவனசாஸ்தா, 16. மகாசாஸ்தா ஆகியனவாம்.

மலைகளில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவைப் பதினாறு கைகள் உடையவராகவும், காட்டில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவைப் பத்துக் கைகள் உடையவராகவும், நகரங்களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை எட்டுக்கைகள் உடையவராகவும், கிராமங்களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை இரண்டு கைகள் உடையவராகவும் பிரதிஷ்டை செய்விக்கவேண்டுமென்று சிவாகமம் கூறுகிறது.

சாஸ்தாவின் மனைவியர் சௌகந்திகன் என்ற அரசனுடைய புதல்வி பூரணாதேவியும், அம்பாராஜனுடைய புதல்வி புஷ்களாதேவியுமாகிய இருவராவர்.

சாஸ்தாவின் பரிவாரங்கள் மகாகாளன்,கோப்தா, பிங்களாக்ஷன், வீரசேனன், சாம்பவன், திரிநேத்திரன், சூலிதக்ஷன், பீமரூபன் முதலியோராவர்.

சாஸ்தாவின் வாகனம்: குதிரை, யானை ஐயனார்கோயில் வாயிலில் இவ்விரு வாகனங்களும் விளங்குவதைக் காணலாம். கொடி: யானைக் கொடி, கோழிக்கொடி.

சுப்ரபேதம் என்ற ஆகமத்தில் ஐயனுர் இரண்டு கண்களும் இரண்டுகைகளும் கொண்டவர்; கரியமேனியில் வெண்ணிறப்பூணூல் அணிந்தவர்; ஆபரணங்கள் அணிந்தவர்; நாய் கோழி ஆடு இவை களோடு விளையாடுபவர்; எல்லாச்சித்திகளையும் அளிக்க வல்லவர்; மதனு, வர்ணினி என்ற இருமனைவியருடன் திகழ்பவர்; பெருவயிறும், பேருடலும் நீளமான அளகங்களால் விளங்கும் தலையும் உடையவர்; இடதுகையில் தடியும், வலதுகையில் வளைதடியும் உடையவர், பழம் தளிர் இவைகளைக் கையில்கொண்டவர்; மடக்கியகால்மீது கையை வைத்திருப்பவர் என்று ஐயனுரது தோற்றம் கூறப்பட்டுள்ளது.

அம்சுமத்பேதம் என்ற ஆகமத்தில், ஐயனுர் வெண்ணிறமேனி உடையவர் என்றும், முக்கண்ணர் என்றும், சாந்தமானவர் என்றும், வெண்பட்டாடை தரித்துப் பத்மபீடத்தில் அமர்ந்திருப்பவர் என்றும் அபயம், வரதம், கத்தி, கேடயம் இவைகளைத்தாங்கும் நான்குகைகளை உடையவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

பூர்வகாரணத்தில் சாஸ்தா சாந்தமூர்த்தி என்றும், இருகைகள் உள்ளவர் என்றும், கருநிறமேனியர் என்றும், தூக்கிமடக்கிய இடது கால்மீது இடதுகையையும் தொங்கவிடப்பட்ட வலதுகாலையும் உடையவர் என்றும் வளைதடி வஜ்ராயுதம் உடையவர் என்றும் நீலநிறகேசம் உடையவர் என்றும், யானையை வாகனமாகவும் கொடி யாகவும் கொண்டவர் என்றும், நீலம் வெள்ளைநிறங்களை உடைய குதிரை எருது ஆகியவற்றை வாகனமாகக் கொண்டவர் என்றும், நான்குகைகளை உடையவர் என்றும் வீராசனத்திலும் யோகாசனத் திலும் வீற்றிருக்கும் ஞானி என்றும் கூறப்பட்டுள்ளது.

சில்பரத்தினம் என்ற நூலில் - ஐயனுர் அழகிய அளகம் உடைய வர்; குண்டலம் அணிந்த காதினர்; ஒருகையில் வில்லும் மற்றெரு கையில் அம்பும் வைத்திருப்பவர்; நீலப்பட்டாடை தரித்தவர்; மேகம் போன்ற மேனியர்; பிரபை என்ற மனைவியையும், சத்யகன் என்ற பிள்ளையையும் அருகில்கொண்டு சிம்மாசனத்தில் எழுந்தருளி யிருப்பவர்; சிவப்பு நிற அணிகலன்கள் பூண்டவர் என்று கூறப் பட்டுள்ளார்.

மகாலக்ஷ்மி கல்பத்தில் மகா சாஸ்தா, சத்ரு சாஸ்தா, ஜவ தாஸ்தா, சர்வசாஸ்தா, சாஸ்தா, பிரசாஸ்தா என்று ஐயனுர்பேதங்கள் ஆறுவிதமாகக் கூறப்பட்டுள்ளன.

ஐயனுர் நிறங்கள் - வசியம் ஆகர்ஷணம் இவைகளில் செந்நிறம் காண்டவராகவும், மோகனத்தில் கருநிறம் கொண்டவராகவும்,

ஸ்தம்பனத்தில் பொன்னிறமுள்ளவராகவும், விஷம் போக்கும் வழி பாட்டிலும் ஞானம் பெறுவதற்கான வழிபாட்டிலும் வெண்ணிற முள்ளவராகவும், துவேஷம் உச்சாடனம் மாரணம் இவற்றில் கருநிற முள்ளவராகவும் ஐயனூர் வழிபடப் பெறுகிருர்.

## 6. ஐயனூர்பற்றிய சில கதைகள்

கி. பி. 16ஆம் நூற்ருண்டில் நரசிம்ம பூபாலன் என்ற சோழ மன்னன் ஒருவன் அரசுபுரிந்தான். அவனது அவைக்களப் புலவராக அப்பய்யதீக்ஷிதரும் வேருெருபுலவரும் விளங்கினர். இருபெரும் புலவர்களோடு மன்னன் ஐயனூர் கோயிலுக்குச் சென்ருன். அக் கோயிலில் ஐயனூர், மூக்கில் விரலைவைத்த நிலையில் காணப்பட்டார். அதற்கான காரணம்யாதென மன்னன் அருகிலுள்ளவர்களைக் கேட்டான். அவர்கள் ‘இங்குஒருஞானிவருவார். அவர் அரசனுடைய வேண்டுகோளின்படி காரணம் கூறுவார் உண்மைக்காரணத்தைக் கேட்டவுடன் சாஸ்தா தன் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிடுவார்' என்று எங்கள் மூதாதையர் கூறியுள்ளனர் என்று தெரிவித்தனர். அரசன் அருகில் இருந்த ஒரு புலவரைப்பார்த்துக் காரணம்கூறுமாறு கேட்டான். அதற்கு அப்புலவர் பின்வரும் பொருளமைந்த கவியைப் பாடினூர். ‘நான் திருமாலின் புதல்வனூகவும் சிவகுமாரனூகவும் இருக் கிறேன்; பிரமனுக்கு நான் சமமானவன்; பூதகணங்கள் என்னைச் சூழ்ந்துள்ளன' என்று சிந்திப்பதாகக் கவி பாடினூர் அப்புலவர். சாஸ்தா மூக்கிலிருந்து கைவிரலை எடுக்கவில்லை.

அரசன் அப்பய்யதீக்ஷிதர் அவர்களைப் பார்த்துக் கவிபாடும்படிக் கேட்டுக்கொண்டான். அப்பய்யதீக்ஷிதர் பின் வரும் பொருளமைந்த கவிதையைப் பாடினூர். ‘நான் பார்வதியையும் திருமாலையும் அம்மா என்று அழைப்பேன்; சிவனைத் தந்தை என்று அழைப்பேன்; திரு மகளை என்ன முறைகூறி அழைப்பது என்று தோன்றவில்லையே என ஐயனூர் சிந்தனைசெய்கிருர்' என்றபொருளமைந்த பாடலைப் பாடினூர். அக்கவிதையைக் கேட்டவுடன் ஐயனூர் மூக்கிலிருந்து கை விரலை எடுத்துவிட்டார்; அரசனும் ஏனையோரும் அப்பய்யதீக்ஷிதரின் கவித்திறனைப் பாராட்டினர் என்று தீக்ஷிதேந்திர நூலில் கூறப் பட்டுள்ளது.

## 7. புஷ்கலை பூரணை திருமணம்

ஐயனூருக்குஇருமனைவியர்.இடதுபுறமிருக்கும்அம்பிகை புஷ்கலை. இவ்வம்பிகை கரிய திருமேனி உடையவள். வலதுகையில் மலரையும் இடதுகையில் வரதமுத்திரையையும் தரித்தவள். இடது காலைத் தொங்கவிட்டும் வலதுகாலை மடக்கியும் இருப்பவள்.

**புஷ்கலையை ஐயனர் மணந்த வரலாறு :**

நேபாளநாட்டில் பலிஞன் என்ெரு மன்னன் வாழ்ந்து வந்தான். அவன் மந்திர தந்திரங்களில் வல்லவன். காளிதேவி யிடம் பக்தி கொண்டவன். காளிதேவிக்கு ஒருகன்னியை அர்ப் பணித்தால் மூப்பின்றி வாழலாம் என்று சிலர் கூறக்கேட்டு ஒரு பெண்ணைக் காளிகோயிலுக்குக் கொண்டுசென்ருன். அம்மன்னன் கொண்டு வந்த பெண் சிவபக்திபூண்டவள். தனக்குவரும் இடை யூற்றிலிருந்து காத்தருளுமாறு சிவபெருமானை வேண்டினுள். சிவ பெருமான் ஐயனுரை அனுப்பி அப்பெண்ணைக்காக்குமாறு செய்தார். பலிஞன் ஐயனுரின் பேரழகில் ஈடுபட்டு அவரைத் தன் மருமகனுக அடைய விரும்பினுன். தன் மகள் புஷ்கலையை மணம்புரிந்து கொள்ளுமாறு வேண்டினுன். ஐயனுரும் அதற்கிசைந்து புஷ்கலையை மணந்து புஷ்கலாபதி என்ற பெயரைப் பெற்ருர்.

பூரணை ஐயனுரின் வலதுபுறமிருக்கும் அம்பிகை. இவள் பொன் னிறம் கொண்டவள். இடதுகையில் குவளை மலரை ஏந்தியவள். வலதுகையைத் தொங்கவிட்டிருப்பாள். இடதுகாலை மடக்கியும் வலதுகாலைத் தொங்கவிட்டும் இருப்பவள்.

**பூரணையை ஐயனுர் மணந்த வரலாறு :**

வஞ்சிமாநகரில் பிஞ்ஞகன் என்ெரு மன்னன் இருந்தான். அவன் ஒருநாள் காட்டுக்குள் வேட்டையாடச்சென்ருன். இரவு நேரம். மன்னனுக்குத் திசைதெரியவில்லை. இரவில் பூதகணங்கள் கானகம் வந்தன. அரசனைக்கண்டு கொல்லுவதற்கு நெருங்கிவந்தன. பிஞ்ஞகன் ஐயனுரை வேண்டினுன். ஐயனுர் மன்னன்முன் தோன் றினுர். பூதங்கள் அஞ்சி ஓடின. ஐயனுரின் அழகில் ஈடுபட்ட பிஞ்ஞகன் தன்புதல்வியை மனைவியாகஏற்றுக்கொள்ளவேண்டினுன். ஐயனும் அதற்கு இசைந்து பூரணையை மணந்து பூரணபதியானுர்.

பூரணை புஷ்கலை இருவரும் சத்தியபூரணர் என்ற முனிவரின் புதல்விகள் என்றும், சௌகந்திகன் அம்பாராசன் ஆகியோரின் புதல்விகள் என்றும், அவர்கள் தவம்செய்து ஐயனுரை மணம்புரிந்து கொள்ளப்பெற்றனர் என்றும் கூறப்படுவதுண்டு,

## 8. ஐயப்பன் வரலாறு

வஞ்சிநாட்டில் ஐயனுர் பூரணையை மணந்து வாழ்ந்துவருவதை அறிந்த நேபாள மன்னன் பலிஞன் தன்மகளை விடுத்து ஐயனுர் பூரணையுடன் வாழ்வதைக்கண்டு வேதனையடைந்து ஐயனுரைநோக்கி

'மனிதனுகப்பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரமசாரியாக வாழ்வாயாக' என்று சபித்தான். ஐயனரும் நாம் நிலவுலகில் தோன்றுவதற்கு இது ஒரு காரணமாயிற்று என்று கருதி, அந்நேபாள மன்னனை நோக்கி 'கேரளத்தில் பந்தளதேசத்தில் நீயே மன்னனுகப் பிறப்பாய்; அங்கே நாம் குழந்தையாக உம்மிடம்வந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்வோம்' என்று கூறி மறைந்தார்.

கேரளநாட்டில் பந்தளம் என்ற பகுதிக்கு அரசனுகப் பாண்டிய மன்னர் பரம்பரையில் இராஜசேகரன் என்றபெயரில்நேபாளமன்னன் அரசுபுரிந்தான். திருமணம் ஆகிப்பல்லாண்டுகளாகியும் புத்திரப்பேறு வாய்க்காமையினுல் மனவேதனை அடைந்தமன்னன், சிவபெருமானை வேண்டிப்பணிந்தான். சிவபிரான் திருவருளால் ஐயனுர் அம் மன்னனின் குழந்தையாகவரத் திருவுள்ளம்கொண்டார், ஒருநாள் காட்டில் வேட்டையாடச்சென்ற மன்னன் குழந்தையொன்று அழுதுகொண்டிருப்பதைக்கண்டு அதன் அருகில் சென்ருன். ஒளியும் தண்மையும் உடைய அக்குழந்தையின் முகத்தைக்கண்டு வியந்தான். பெருமான் அந்தணர்உருவில் அங்குவந்து அரசனைநோக்கி 'மன்னு! இக்குழந்தை தெய்வாம்சம் பொருந்தியது; இதனைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறது; எடுத்துச்சென்று வளர்த்துவா' என்றுகூறி மறைந்தார்.

மன்னன் மகிழ்ச்சிக்கடலில் திளைத்தவனுய் அக்குழந்தையை அரண்மனைக்கு எடுத்துச்சென்று அரசியிடம்கொடுத்து மணிகண்டன் எனப் பெயர்சூட்டி அன்போடு வளர்த்துவந்தான்.

**குருதக்ஷிணை :**

மன்னன் மணிகண்டனைக் குருகுலத்தில் சேர்த்துக் கல்விபயிலுமாறு செய்தான். ஓதாமலே எல்லாவற்றையும் உணர்ந்த மணிகண்டனைப் பார்த்துக் குரு வியந்தார். மணிகண்டன் கடவுள் தன்மை பொருந்தியவர் என்று உணர்ந்த குரு, ஊமையும் குருடனுமாயிருக்கும் தன்மகனைக் குறையற்றவனுகச் செய்தருளுமாறு மணிகண்டனை வேண்டினுர். மணிகண்டன் குருவின் மகனுக்கிருந்த குருட்டுத் தன்மையையும் ஊமைத்தன்மையையும் ஒழித்து, அவனைச் சிறந்த ஞானமும் உடல் நலமும் உடையவனுகுமாறு செய்தருளினுர்.

**அறிவிழந்த அரசி :**

மணிகண்டரை மைந்தனுகப் பெற்றபின் மன்னன்மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றிருந்தாள். அரசனும் அக்குழந்தைக்கு இராஜராஜன் எனப்பெயரிட்டான். மணிகண்டர் தம் இளவல் இராஜராஜனேடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்தார்.

மன்னனின் அமைச்சன் மணிகண்டரின் பேராற்றலை உணர்ந்து 'இவர் அரசரானால் நமக்குப் பெருமை இருக்காது' என்று நினைத்து எப்படியாவது மணிகண்டரை விரட்டிவிட்டு இராஜராஜனை அரசனாக்க வேண்டுமென்று திட்டமிட்டான். மணிகண்டனிடம் அளவற்ற அன்பைப்பொழியும் மன்னனிடமிருந்து மணிகண்டனை எவ்வாறு பிரிப்பது என்று ஆராய்ந்துமுடிவில் அரசியிடம் சென்றான். அவளிடம் மன்னன் மணிகண்டனையே அரசனுக்குவான் போலத் தெரிகிறது; அரசபரம்பரையில் வந்த தங்கள் புதல்வன் இந்நாட்டு மன்னனாக வேண்டுமென்றால் மணிகண்டனை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் என்று கூறினான். அரசி 'அதற்கு வழியாது' எனக் கேட்க. அமைச்சன் அரசிக்கு ஒரு உபாயம் சொல்லிக்கொடுத்தான். 'தாங்கள் தாங்கமுடியாத தலைவலியால் தவிப்பதுபோல நடிக்க வேண்டும்; என்னுடைய தூண்டுதலால் புலிப்பால் கொண்டுவந்து தடவினால்தான் தலைவலி தீரும் என்று மருத்துவர் கூறுவார்; அதைக் கேட்ட மணிகண்டன் தானே புலிப்பால் கொண்டு வருவதாகக் கூறி காட்டுக்குச் சென்று புலியிடம் அகப்பட்டு இறப்பான்' என்று தீயவழி கூறினான் அமைச்சன். மந்தரையின் வார்த்தையினால் மனம் மாறிய கைகேயிபோல மந்திரியின் சூழ்ச்சிக்குப் பலியானாள் அரசி. அமைச்சன் கூறியவாறே தலைவலி வந்ததுபோல நடித்தாள். மருத்துவர் இந்நோய் புலிப்பாலினால் அன்றித் தீராது என்றனர். மணிகண்டர் நான் புலிப்பால் கொண்டுவருகிறேன் என்று கூறிப் புறப்பட்டார்; கானகம் நோக்கிச் சென்றார்.

**மகிஷிவதம் :**

தனு என்ற அசுரனுக்கு ரம்பன் கரம்பன் என்று இருபுதல்வர்கள் இருந்தனர். ரம்பனுடைய மகன் மகிடாசுரன் துர்க்கையினால் கொல்லப்பட்டான். கரம்பனுடைய மகள் மகிஷி எனப்படுவாள். மகிஷி பிரமனைக்குறித்துத் தவம்செய்து வரம் பல பெற்றுத் தேவருலகம் சென்று அரசுபெற்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இடையூறுகள் விளைத்து வந்தாள். ஐயனார் மணிகண்டராகக் கானகம் வருவதை ஞானக்கண்களால் அறிந்த இந்திரன் முதலான தேவர்களும் முனிவர்களும் கானகம் வந்தனர். அவரை அழைத்துக்கொண்டு பொன்னம்பலமேடு சென்றனர். காந்தமலையில் பொன்னம்பலத்தில் சிங்காதனத்தில் மணிகண்டரை எழுந்தருளச்செய்து தங்களுக்கு மகிஷி என்ற அரக்கியால் ஏற்பட்டதுன்பங்களைக் கூறி, மகிஷியை அழித்துத் தங்களைக் காத்தருளுமாறு மணிகண்டரை வேண்டினர். மணிகண்டரும் உடனே தெய்வலோகம் சென்றார். மகிஷியுடன் போரிட்டு வென்று அவளைக் கொன்று தேவர்களைக்காத்தருளினார்; மீண்டும் காந்தமலை வந்து அமர்ந்து தன் தாய் புலிப்பால் கேட்டதை இந்திரனிடம்

கூறினர். இந்திரன் புலியாகமாறினான். மணிகண்டர் அதன் மீது ஏறி அமர்ந்தார். ஏனைய தேவர்கள் பெண்புலிகளாய் உடன் வந்தனர்.

புலிமீது ஏறிப் புலிக்குழாத்துடன்வரும் மணிகண்டரைக்கண்டு நகரமக்கள் அஞ்சி ஓடினர். அமைச்சன் மயக்கமுற்றான். அன்னையும் அடாது செய்ததை எண்ணி வருந்தினாள். தந்தை மணிகண்டனை வாரித் தழுவினான். மணிகண்டர் அமைச்சரைத் தெளியவைத்துத் தாயைத்தேற்றி 'அன்னையே எனக்கு அரசாளும் விருப்பம் இல்லை. இராஜராஜனுக்குப் பட்டம் கட்டி நாட்டை அரசாளச் செய்யுங்கள்; உலக நலம் விரும்பிப் பன்னிரண்டு ஆண்டுகள் உங்கள் பிள்ளையாய் வளர்ந்தேன்; நான் வந்தகாரியம் முடிந்தது போய்வருகிறேன்' என்று கூறிப் புறப்பட்டார். தந்தையை நோக்கிச் சபரிமலையில் தனக்கு ஒரு ஆலயம் அமைக்குமாறு கூறி விடைபெற்றுக் காந்தமலை சென்றார்.

**சபரிமலையில் சாஸ்தா கோயில் :**

மணிகண்டரின் பிரிவாற்றாது மன்னன் இராஜசேகரன் மனம் வருந்தினான். கும்பமுனி அம்மன்னனின் வருத்தத்தை மாற்றினர். சில நாட்கள் கழிந்தபின் மன்னன் தன் படைகளோடு சபரிமலை சென்றான். அங்கு சரங்குத்திய மரத்தைக் கண்டு அவ்விடத்தில் கோயில் கட்டத் தீர்மானித்தான். இரவுப் பொழுது வந்தது. உறங்கிய மன்னனை ஒரு பூதம் தூக்கிச்சென்று காந்தமலையில் ஐயப்பரிடம் விட்டது. மன்னன் காந்தமலையிலுள்ள பொற்கோயிலில் தேவர்கள் புடைசூழ மணிகண்டர் வீற்றிருப்பதைக் கண்டான். மணிகண்டர் தந்தையை வரவேற்று உபசரித்தார்; சபரிமலையில் அமர்ந்துள்ள கோலத்தில் ஒருகோயில் கட்டுமாறு கூறினர். இடையூறுகள் வரின் பயன் படுத்துக என்று ஒரு கத்தியையும் வழங்கி அனுப்பினர். மன்னன் சபரிமலையில் சிறந்த சிற்பிகளைக்கொண்டு கோயில் கட்ட முற்பட்டான். இந்திரன் தானே அக்கோயிலைக் கட்டவேண்டுமென்று மன்னனைத்தடுத்தான். இருவருக்கும் போர்மூண்டது. மன்னன் மணிகண்டர் தந்த கத்தியால் இந்திரனோடு போரிட்டான். முடிவில் இந்திரன் மன்னனைச் சரண் அடைந்தான். மன்னனும் இந்திரனும் விசுவகர்மாவின் துணையோடு பதினெட்டுப் படிகளுடன் கூடிய சபரிமலைக் கோயிலைக்கட்டினர். சாஸ்தாவின் திருவுருவைப்பரசுராமர் அகத்தியர் தேவர் முனிவர் சந்நிதியில் எழுந்தருளச்செய்தனர். சின்முத்திரையோடு கூடிய வலக்கரமும் முழங்காலின்மீது நீட்டிய இடக்கரமும்கொண்டவராய், குந்தியமர்ந்தகோலத்தில் சாஸ்தாவைப் பிரதிட்டைசெய்தனர். சாஸ்தா சபரிமலை, அச்சன்கோயில், குளத்துப் புறை, ஆரியன்காவு, எரிமேலி முதலிய இடங்களிலும் ஐயனார் அமர்ந்து அருள்வழங்கிவருகின்றார்.

**நன்றிக் குறிப்பு:**

இக்கட்டுரை எழுதுவதற்குத் தருமபுரம் சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் வழங்கிய குறிப்புக்களும், திருவெண்காடு பிர்மஸ்ரீ டி. கே. முத்துசாமி சாஸ்திரிகள் அவர்கள் எழுதிய 'மகாசாஸ்தாவும் மணிகண்டரும்' என்ற நூற்குறிப்புக்களும் பெரிதும் துணை செய்தன.

அரிய பூரணை புட்கலை யாம்இரு
தெரிவை மார்முலைச் செங்களபத்தொளி
விரவு சுந்தர மேருஒப் பாம்புயக்
குரிசில் தண்டைக் குரைகழல் போற்றுவாம்.

— திருச்செந்தூர்ப்புராணம்.

---

# பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

## வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

உடல்நோயைவிட உள்ளத்துநோய் அதிகமாக மலிந்துவரும் இந்நாளில் வைத்தியநாதனைத் துதிப்பார்க்கு இகமும், பரமும் ஈடிலாப் பேறும் கிடைக்கும். புறத்தூய்மையும்கொண்டு விளங்கும் இத்திருக்கோயிலில் மேலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் வந்து உய்ய அந்த வைத்தியநாதனே அருள்பாலிக்கவேண்டும். ஆதீனத்து ஆலயங்கள் மட்டும் திறம்படச் செயல்படுவதன் காரணம் அனைவரும் அறிதல் அவசியம். கோயில் விளக்குக்கு மான்யம் இருந்தும் மற்றகோயில்களில் மூர்த்திக்கும் எண்ணெய்க்காப்பு இல்லாததைப்பார்க்கும் இக்காலத்தில் புனிதத்தலைவனுக்கு விளக்கேற்றி விளங்கவைப்பது இது போன்ற சில ஆலயங்களில்மட்டுமே. நாம் இறைவனுக்கு விளக்கேற்றினால் நம் வீட்டில் ஒளி வீசும்.

(ஒப்பம்) ஜி. சுப்பிரமணியன்,
நிலைய இயக்குனர்,
அகில இந்திய வானொலி நிலையம்,
பாண்டிச்சேரி.

11-11-79.

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜைவிழா

தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா மார்கழித்திங்கள் 21 ஆம் நாள் சனிக்கிழமையன்று (5—1—80) குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றினார்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் மாயூரம் அன்பர்களும் மற்றும் பலரும் வந்து வழிபட்டுக் குருவருட்பிரசாதம் பெற்று உய்ந்தனர். மாலை வழிபாட்டின்போது சந்தான சாரியருள் ஒருவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் அருளிய நூல்களுள் ஒன்றாகிய 'நெஞ்சுவிடு தூது' என்னும் சாத்திர நூல் விழாமலராக வெளியிடப்பெற்று, அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. காலை வழிபாட்டின்பின்னர் 'ஆதீன அருள் நூல்கள்' என்ற தலைப்பில் அறிஞர்கள் பலர் விரிவுரையாற்றினர். வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விரிவுரையைத் தொடக்கிவைத்தார்கள். தொடர்ந்து திரு. மு. ஆறுமுகதேசிகர், திரு. வி. சபேசன், திரு. மு. சிவச்சந்திரன், திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் முறையே 'தசமணிமாலை,' 'சமூகமாலை,' 'சந்திரகலாமாலை,' 'கிளிவிடு தூது' என்ற நூல்கள்பற்றி விரிவுரையாற்றினர். மாலை 6 மணியளவில் ஆதீனத் திருக்கோயில் திருமுறைப்பணியாளர்களின் திருமுறை இசையரங்கு நிகழ்ந்தது. பின்னர் வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன்பு மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "நெஞ்சுவிடு தூது" என்ற நூல்பற்றி விளக்கவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

## ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய

வழிபாடு, மார்கழித்திங்கள் 21 ஆம் நாள் (5—1—80) சனிக்கிழமை நண்பகல் திருக்கடவூர் மயானம் ஸ்ரீ மலர்க்குழல்மின்னம்மை உடனுகிய ஸ்ரீ பிரமபுரீஸ்வரர் திருக்கோயிலிலும், மாலை தருமையாதீனத் திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனுகிய அமிர்தகடேசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது தலத்திருப் பதிகப் பாராயணம் திருமுறைப் பணியாளர் திரு. நடராஜன் அவர் களால் நிகழ்த்தப்பெற்றது. தலத்திருப்பதிகங்கள் அடங்கிய நூல் உரையுடன் வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

திருக்கடவூர் திருக்கோயில் வழிபாட்டின்போது ஆதீனக்கல்லூரி முதல்வர் வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர், திருக்கடவூர் ஆசிரியர் திரு. தியாகப்பச் செட்டியார் ஆகியோர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## தருமையாதீனத்தில் திருவெம்பாவை விரிவுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன்னிலையில் திருவெம்பாவை விரிவுரை திருவாதிரைவிழா நாட்களில் நாள்தோறும் மாலை 7 மணி முதல் தொடங்கி நடைபெற்றது. தருமையாதீனக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்கள் விரிவுரை நிகழ்த்திஞர்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர் களும் ஆதீன அலுவலர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் உயர்பள்ளி. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் வந் திருந்து விரிவுரையைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

## பொன்னூசல் திருவிழா

**வேளூரில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் திருப்பொன்னூசல் திருவிழா 24-12-79 திங்கட்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. இந்நாட்களில் இறைவனையும் இறைவியையும் ஊஞ்சலில் எழுந்தருளச்செய்து திரு வெம்பாவை ஓதி வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. 1—1—80 செவ் வாய்க்கிழமையன்று பொன்னூசல் திருவிழா நிறைவுபெற்றது. 2—1—80 புதன்கிழமையன்று திருவாதிரையாதலின் ஸ்ரீ நடராஜர் அபிஷேமும் நடராஜப்பெருமான் திருவீதியுலாவும் சிறப்பாக நடை பெற்றன. அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

**சீகாழியில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஊஞ்சல் உற்சவம் 24—12—79 திங்கட்கிழமை தொடங்கி நடைபெற்றது. நாள்தோறும் மாலையில் சுவாமி அம்பாள் பிராகாரத்தில் வலம்வருதலும் ஊஞ்சலில் எழுந்தருளச் செய்தலும் காலை மாலை இருவேளைகளிலும் மாணிக்கவாசக சுவாமிகள் பிராகாரத்தில் எழுந்தருளிவரத் திருவெம்பாவை ஓதி தீபாராதனை நிகழ்த்துதலும் நடைபெற்றன. 1—1—80 செவ்வாய்க்கிழமை இரவு திருவாசகத்தின் ஒருபகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதி தீபாராதனை நிகழ்த்தப்பெற்றது. 2—1—80 புதன்கிழமை திருவாதிரைத் திருநாளாதலின் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. பின்னர் நடராஜப்பெருமானின் திருவீதியுலாக் காட்சியைத் தரிசித்து அன்பர்கள் பயன் பெற்றனர்.

### தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

### மார்கழிமாதச் சிறப்பு வழிபாடு

மார்கழிமாதத்தை வழிபாட்டிற்குரிய மாதமாக நம் முன்னோர்கள் கொண்டுள்ளனர். அதனாலேயே முன்னோர்கள் சைவ - வைணவத் திருக்கோயில்களில் வைகறைப்போதில் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டையும் சிவன் கோயில்களில் திருவாதிரைப் பெருவிழாவையும் திருமால் திருக்கோயில்களில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவையும் ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். இம்மாதம் தேவர்களின் விடியற்காலம் என்றும் அவ்விடியற்காலைவேளையில் இறைவழிபாடு செய்து இறையருள் பெறவேண்டும் என்றும் கருதி இம்மார்கழிமாத வழிபாட்டை நம் முன்னோர்கள் மேற்கொண்டுள்ளனர். மாதங்களுக்குள் மார்கழி மாதமாக இருக்கிறேன் என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார் என்பது இம்மாதத்திற்கு மேலும் சிறப்புத் தருவதாகும். இம்மாதத்தில் இறைவழிபாட்டை மேற்கொள்வோர். இவ்வாண்டு முழுவதும் செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பது நம் முன்னோர்கள் முடிவு. அம்முறையிலே நம் நாட்டில் திருப்பள்ளியெழுச்சிவழிபாடு எல்லாத் திருக்கோயில்களிலும் சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது.

தருமையாதீனத் திருக்கோயில்களிலும் மார்கழிமாத வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது. தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய

ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும் சிறப்புற நிகழ்த்தியருளுகின்றார்கள்.

பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காம்பிகைத் திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளுகிறார்கள். ஆங்காங்கும் உள்ள மக்கள் பலருக்கும் இறை வழிபாட்டு முறையை உணர்த்தவும் அவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்திப் பயன்பெறச்செய்யவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பலதலங்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றியருளுகிறார்கள். மேலும் ஆதீனத் திருக்கோயில்களுக்கு எழுந்தருளும்போது ஆதீன உயர் அலுவலர்களையும் உடனழைத்துச்சென்று ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடச்செய்து நெறிப்படுத்தியருள்வதும் குறிப்பிடத்தக்கது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்பு வழிபாட்டின்போது உலக நலங்கருதி சுவாமிக்கும், அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அருச்சனையும் நிகழ்த்துவித்து வழிபாடாற்றுகிறார்கள்.

சோழநாட்டைச் சிவாலயமாகக்கொண்டு வழிபடும் முறையில் மத்தியார்ச்சுனம் என வழங்கும் திருவிடைமருதூர்த் திருக்கோயிலையும், சூழவுள்ள திருவலஞ்சுழியை விநாயகர் தலமாகவும், சுவாமிமலையை முருகன் தலமாகவும், திருவாவடுதுறையை நந்தித் தலமாகவும், திருஆலங்குடியைத் தட்சிணாமூர்த்தித்தலமாகவும், சிதம்பரத்தை நடராஜப்பெருமானுக்குரிய தலமாகவும், சீகாழியைப் பைரவர் தலமாகவும், திருவாரூரைச் சோமாஸ்கந்தர் தலமாகவும், திருஆப்பாடியைச் சண்டேசுவரர் தலமாகவும், சூரியனார்கோயிலை நவக்கிரகத்தலமாகவும்கொண்டு விளங்கும் தலங்களையும் வழிபட்டருளுகின்றார்கள்.

வழிபாடுசெய்த திருத்தலங்கள் : 16 — 12 — 79 மார்கழிமாத முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை குத்தாலம் ஸ்ரீ மிருதுமுகிழாம்பிகை உடனுகிய ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி திருக்கோயில், 17—12—79 திங்கட்கிழமை திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயில், 18, 25—12—79, 1—1—80 ஆகிய செவ்வாய்க்கிழமைகளில் வேளூர் ஸ்ரீ தையல்நாயகியம்மை உடனுகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில் ஆகிய தலங்களில் வழிபாடாற்றினார்கள்.

(தொடரும்)

# எதிர்காலம்

**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**சித்தார்த்தி ஸு தை மீ 1உ முதல் 29உ முடிய.**

**( 15—1—80 முதல் 12—2—1980 முடிய )**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கே சு | இராசி | | |
| சூ பு | | | ல கு செ ரா |
| | சந் | | சனி |

| | | | |
|---|---|---|---|
| | | ரா | |
| பு | அம்ஸம் | | |
| சனி சூ | | | ல |
| சந் | கே | சு | செ கு |

ஸ்ரீ சித்தார்த்தி ஸு மார்கழி மீ 30உ சோமவாரம் கேட்டை நக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 36 நாழிகை 29 வினாடிக்குச் சிம்ம லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு தனுர் ராசியிலிருந்து மகர ராசி சங்கிரமணமாகத் தைமாதப் பிரவேசம்செய்தருளுகின்றார். மறுதினம் மங்களவாரம் உத்தராயண புண்ணியகாலமாகும். சங்கிரமவாராதிபதி சந்திரன் நீரஸாதிபதியாகிறார். அதனால் உலகில் வெண்மைப் பொருள்களாகிய வஸ்திரம், முத்து, வெள்ளி, வைரம் இவற்றின் விருத்தி மிகும். உலகில் எங்கும் மழைபொழிந்து சுபிட்சம் ஏற்படும். சர்வேசுவரனுடைய கிருபையால் தேசங்களில் நியமனமாகி வந்துள்ள ஜனப்பிரதிநிதிகள் ஜனாதிபதிகள் இறைமைகொண்டு சிவ தர்மங்களில் கண்ணோட்டம் செலுத்தி, செங்கோல் ஆட்சி நடத்தி வருவார்கள். நாடுகளில் எங்கும் பிரஜைகளுக்கு நல்லன ஏற்படும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவபெருமானைப் பூசிக்கிறபாக்கியம் வரமாகப்பெற்றுவந்துள்ள சிவஞானகுருமகான்கள் இறைவன் கட்டளை நிறைவேற்றம் செய்பவர்களாக இப்பூவுலகில்

எங்கும்சிவகைங்கர்யங்களைச் செய்விப்பார்கள். லோகமாந்தர்களுக்குச் சிவாசார உயர்வழி காட்டி அனுக்கிரகம் பாலித்தருள்வார்கள். அன்னுர் திருச்சபையினின்றும் வருகின்ற தம்பிரான் சுவாமிகள் சிஷ்ய கோடிகள் உலகெங்கிலும் சிவசமய சங்கங்களமைத்து, சிவபுண்ணிய காரியங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ பூஜைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். பிரஜைகள் பக்தியாக இறைவனைத் தரிசித்து, புனித வாழ்க்கை நடத்துவார்கள்.

## சங்கிராந்தி புண்ணியகாலம்

குறிப்பு :— இராசிமண்டலத்தில் சூரியன் 30 பாகையையுடைய ஓர் இராசியினின்றும் அடுத்தராசியில் பிரவேசிப்பது மாதப்பிறப்பாகிறது. அது அந்தராசியில் 'சங்கிரமித்தல்' எனப்படும். இந்தச்சங்கிராந்தியானது சித்திரைமாதம் முதல் ஒவ்வொரு மாதப்பிறப்பிலும் ஏற்படும்.

இதில் மேஷ துலா ராசிகளின் சங்கிரமணங்களுக்கு 'விஷு' என்று பெயர். இந்த விஷுவுக்கு முன்பின் 10 நாழிகை புண்ணிய காலமாகும்.

கடகராசி சங்கிரமணம் தட்சிணுபன புண்ணிய காலம். இதற்கு முன் 20 நாழிகை புண்ணியகாலமாகும்.

மகரராசி சங்கிரமணம் உத்தராயண புண்ணிய காலம். இதற்குப் பின் 20 நாழிகை புண்ணிய காலமாகும்.

ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இவ்விராசிகளின் சங்கிரமணங்கள் விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். இதற்கு முன் பின் 16 நாழிகை புண்ணியகாலம்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவ்விராசிகளில் சூரியன் சங்கிரமணமாகுதல் 'ஷடசீதி' எனப்படும். இதற்குப்பின் 60 நாழிகை புண்ணியகாலம்.

அர்த்த ராத்திரிக்குமுன் மாத சங்கிரமம் ஆனுல் முதல் நாள் பகலிலும் அர்த்தராத்திரிக்குப்பின் மாத சங்கிரமம் ஆனுல் மறுநாள் பகலிலும் புண்ணியகாலம். இது விஷ்ணுபதி ஷடசீதிகளுக்கு விசேஷ விதி

இந்தப் புண்ணியகாலம் 12ம் ஷண்ணவதியிற் சேர்ந்தவை. இவ்வித புண்ணிய காலத்தில் ஸ்நானம், தானம், ஜெபம், தியானம் முதலியவை செய்வதால் மிகுந்த பயன் பெறலாம்.

1. **மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼**
( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் தானிய வருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரருக்கு அரசாங்கத்தில் நன்மைகள் ஏற்படும். வித்துவத்துவக் கலைத்துறையில் எழுத்துமூலவிஷயங்களில் பிரபல ஸ்திதியை ஏற்படுத்தும். இயந்திர சாதனங்களில் நற்பயன் ஏற்பட்டுவரும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தைமீ 1, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. **ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**
( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் நல்ல விதத்தில் வந்துகொண்டிருக்கும். 15உக்குமேல் வித்துவத்துவத்தில் கலைத்துறையில் நல்ல வெகுமதியைத்தரும். நற்புகழ் ஏற்படும். 22உக்கு மேல் வாகனப் பிராப்தி ஒன்று ஏற்படும். தேகத்தில் வாயுபீடிதம் ஏற்பட்டு உடன் சௌகரியம் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் சாதாரணமாக இருந்துவரும். தை மீ 2, 3, 29 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

3. **மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**
( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இராஜகண்யமாக தன வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். சகோதரர்களின் ஜீவனேபாயங்களில் பெருமதிப்பை உண்டுபண்ணும். இயந்திர வாகனங்களின் பிராப்தியில் நல்ல ஸ்திதியை உண்டுபண்ணும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்பலன் வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தைமீ 3உ 38 நாழிகை 42 விஞடி முதல் 5உ 47 நாழிகை 5விஞடிவரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

4. **கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**
( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தன தானியங்களின் நிறைவை ஏற்படுத்தும். 15உ முதல் எழுத்து மூலத்தில் ஒப்பந்தம் தவணை வசூல் லேவாதேவிகளில்

கணிசமாகப் பொருள் வந்துசேரும். இயந்திர வாகனப்பிராப்தியில் புதுமையை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தைமீ 5௳ 47 நாழிகை 5 விளுடிமுதல் 7௳ 53 நாழிகை 17 விளுடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

5. **சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$**
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தில் பண வருமானங்கள் கண்யமாக வந்து கொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். 24 தேதிக்குப்பிறகு வாகன பிராப்தி ஒன்று ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் உயர்வை ஏற்படுத்தும். தைமீ 7௳ 53 நாழிகை 7 விளுடிமுதல் 9௳ 59 நாழிகை 21 விளுடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

6. **கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$**
(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் சீராக இருந்துவரும். அடிக்கடி அவசிய செலவினங்களும் ஏற்படும். 15௳ ஆனல் ஜீவனேபாயத்தில் ஓர் உயர்வை உண்டுபண்ணும். அஜீர்ணம் நரம்புத்தளர்ச்சி நலிவு கண்டு நீங்கும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம்தரும். மனைவி நலம் சாதாரணமாக இருந்துவரும். தைமீ 9௳ 59 நாழிகை 21 விளுடிமுதல் 12௳ 7 நாழிகை 54 விளுடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. **துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$**
(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் சிலாக்கிய பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். பூமிஇயந்திரங்களில் நற்பலன்வரும். நூதன வாகன பிராப்தியைத் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். தை மாதம் 12௳ 7 நாழிகை 54 விளுடிமுதல் 14௳ 20 நாழிகை 47 விளுடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் – கேட்டை.**
**(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)**

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல விதத்தில் தன வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். இரத்தினபூஷணங்களின்பிராப்தியைத்தரும். 15உ ஆனல் வித்தியா வியாபாராதிகளில் முன்னேற்ற ஸ்தியும் நன்மைகளும் ஏற்படும். வாகனசுகம்திருப்தியளிக்கும். தாரம் புத்திரர் இவர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தைமீ 14உ 20 நாழிகை 47 விஞடிமுதல் 16உ 39 நாழிகை 25 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$**
**(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)**

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் கண்யத்திற்கேற்ற வகையில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளின் நலம் சாதாரணமாக இருந்துவரும். வீடு வாகன பிராப்தியில் புகழ் ஏற்படும் வித்துவத்துவம் கலைத்துறைகளில் வெளிவட்டாரத்தில் புகழ்ஏற்படும். 15உக்கு மேல் மனைவிக்கு இரத்தசோகையால் பலவீனம் காணும். தைமீ 16உ 39 நாழிகை 25 விஞடிமுதல் 19உ 4 நாழிகை 2 விஞடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$**
**(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)**

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்களில் நல்லநிலையை ஏற்படுத்தும். சகோதரர்நலம் சாதாரணமாக இருந்துவரும். 15உ ஆனல் வித்துவத்துவம் கலைத்துறைகளில் நம்பிக்கை நாணய லேவாதேவிகளில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். நாகரிக வஸ்துக்கள் வாங்குதல் ஆகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். தைமீ 19உ 4 நாழிகை 2 விஞடி முதல் 21உ 32 நாழிகை 43 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**
**(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)**

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் கணிசமாக வரவாகிக் கொண்டி

ருக்கும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளிலும் அம்மான் சம்பந்தமாகவும் விசேஷமான செலவினங்கள் ஏற்படும். சகோதரர் நலம் நன்ருக இருந்துவரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். முன்செலவினங்கள் இருப்பினும் அரசாங்கத்தில் பதவி பட்டங்கள் நல்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தைமீ 21உ 32 நாழிகை 46 விஞடிமுதல் 24உ 1 நாழிகை 29 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**12. மீனம் :– பூரட்டாதி ¼– உத்திரட்டாதி – ரேவதி.**

( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் தன தானியங்களின் வருமானம் திருப்தியளிக்கும். சகோதரர் சகோதரிகள் சௌக்கிய மேன்மையில் இருந்துவருவர். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் முன்னேற்ற ஸ்திதி ஏற்படும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தைமீ 24உ 1 நாழிகை 29 விஞடிமுதல் 26உ 26 நாழிகை 30 விஞடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.


## ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின்முதல்வருமான ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஆயுட் சந்தா | (உள்நாடு) | ரூ. | 100—00 |
| ,, | (வெளிநாடு) | | 125—00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | | 7—50 |
| ,, | (ஸ்ரீலங்கா) | | 10—00 |
| ,, | (வெளிநாடு) | | 12—00 |

நிர்வாக ஆசிரியர்: " ஸ்ரீ குமரகுருபரர் "
ஸ்ரீ காசி மடம் : திருப்பனந்தாள்.
தஞ்சை மாவட்டம். 612 504.

# தைமாதச் சிறப்பு நாட்கள்

| | |
|---|---|
| 15—1—80 | செவ்வாய், உத்தராயண புண்ணியகாலம், திருவையாறு தீர்த்தம், சங்கராந்திப்பண்டிகை. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி அபிஷேகம், சீகாழி ஸ்ரீஉமாமகேசருக்கு உச்சிக் காலத்தில் புழுகாப்பு, குத்தாலம் ஸ்ரீசந்திரசேகரர் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல், வேளூர் உண்டியல் வைத்தல், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும், ஸ்ரீ சண்முகருக்கும் சண்முகார்ச்சனை, இது தைமாதம் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் நடைபெறும், பிரதோஷம். |
| 16—1—80 | புதன், கனுப்பண்டிகை, மாட்டுப்பொங்கல், மாதசிவராத்ரி. |
| 17—1—80 | வியாழன், சர்வ அமாவாசை, திருக்கடவூர் அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள், |
| 18—1—80 | வெள்ளி, வேளூரில் ஸ்ரீகர்ப்பகவிநாயகருக்குத் தைமாதசுக்கிர வார உற்சவாரம்பம், ஸ்ரீதையல்நாயகியம்பாளுக்குச்சந்தனக் காப்பும், நவசக்தி அருச்சனையும், சீகாழி, திருக்கடவூர் முதலிய தலங்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நவசக்தி அருச்சனையும் நடைபெறும். இது தைமாதம் ஒவ்வொரு சுக்கிரவாரமும் நிகழும். |
| 20—1—80 | ஞாயிறு, அப்பூதியடிகள் நாயனார் குருபூஜை. |
| 22—1—80 | செவ்வாய், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம், தைப்பூச உற்சவ ஆரம்பம். |
| 23—1—80 | புதன், கலிக்கம்ப நாயனார் குருபூஜை. |
| 24—1—80 | வியாழன், ரதசப்தமி, |
| 26—1—80 | சனி, வேளூர். தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை, கிருத்திகை விரதம், குடியரசுதினம். |
| 28—1—80 | திங்கள், தருமபுரம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு சம்வத்ஸராபிஷேகம், கண்ணப்ப நாயனார் குருபூஜை. |
| 29—1—80 | செவ்வாய், பிரதோஷம், அரிவாட்டாய நாயனார் குருபூஜை. |
| 30—1—80 | புதன், தருமபுரம் ஸ்ரீவன துர்க்காதேவி சம்வத்ஸராபிஷேகம். |
| 31—1—80 | வியாழன், தைப்பூசம், புஷ்ய உற்சவ தீர்த்தம், பௌர்ணமி விரத பூஜை, மாதபூஜையில் தேன் அபிஷேகம். வடலூர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் ஜோதி தரிசனம், |
| 3—2—80 | ஞாயிறு, வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குக் கடைச் செவ்வாய் உற்சவாரம்பம். |
| 4—2—80 | திங்கள், சங்கடகரசதுர்த்தி, சண்டேசுரநாயனார் குருபூஜை. |
| 5—2—80 | செவ்வாய், ஆலவேலி ஸ்ரீ சித்திவிநாயகர் சம்வத்ஸரா அபிஷேகம். |
| 7—2—80 | வியாழன், தருமையாதீனம் 15 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. |
| 9—2—80 | சனி, காளாஷ்டமி. ஸ்ரீ தாயுமானவர் குருபூஜை. திருநீலகண்ட நாயனார் குருபூஜை. |
| 10—2—80 | ஞாயிறு, விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி சம்வத்ஸராபிஷேகம். |
| 12—2—80 | செவ்வாய், வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கடைச் செவ்வாய் தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ முனீஸ்வரபூஜை. |

# "ஞானசம்பந்தம்" சந்தாதாரர்களுக்கு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி, சிவஞானத்தேன் நிறைந்து, கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்தெட்டு ஆண்டுகள் நிறைந்து முப்பத்தொன்பதாவது ஆண்டின் இரண்டாவது இதழ் வெளிவருகிறது.

நேயர்கள் சிலர் இந்த ஆண்டுக்குரிய சந்தாத் தொகையை அனுப்பிவைக்காததால் தொடர்ந்து ஞானசம்பந்தம் அனுப்ப இயலாமல்போகிறது. ஆகையால் சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனுறுவார்களாக.

ஆயுள் சந்தா செலுத்தினால் அவர்களது வாரிசுகளும் "ஞானசம்பந்தம்" பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும். இவ்வரியவாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா ( உள்நாடு ) | ... | ரூ. | 9—00 |
| ஆண்டுச் சந்தா ( சிலோன் ) | ... | ரூ. | 11—00 |
| ஆண்டுச் சந்தா (வெளிநாடு) | ... | ரூ. | 17—00 |
| ஆயுள் சந்தா ( உள்நாடு ) | ... | ரூ. | 100—00 |
| ஆயுள் சந்தா ( வெளிநாடு ) | ... | ரூ. | 125—00 |

## விளம்பரம்

| | | | |
|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்பக்கம் | 2-கலர் | ரூ | 300—00 |
| பின் அட்டை உட்பக்கம் | 1-கலர் | ரூ | 200—00 |
| இதழின் உட்பக்கம் | ,, | ரூ | 100—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609 001
தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10—1—80